வித்துவான்

க.கதிரேசன் எம்.ஏ.,பி.எட்.,

இந்நூலின் உரையாசிரியர் வித்துவான் க.கதிரேசன், எம்.ஏ.,பி.எட்., திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் (1955-59) பயின்றவர். 1958ல் சென்னை மாணவர் மன்றம், காரைக்குடி திருக்குறள் கழகம் நடத்திய மாநில, கல்லூரி கவிதைப் போட்டிகளில் முறையே 4ஆம், 3ஆம் பரிசு பெற்றவர். 1959-1994 வரை குன்றக்குடி ஆதீனத்துக் குன்றக்குடி த.க.கு.மே.பள்ளியில் தமிழாசிரியர் பணி. 1994-2000 வரை பிள்ளையார்பட்டி வேதசிவாகமபாடசாலையில் சாத்திரம், திருக்குறள், திருமுறையாசிரியர்.

27.03.1994 "குன்றக்குடி ஆதீனப் புலவர்" ஆக்குதல், 02.10.2006ல் "சைவத் தமிழ்மணி" விருது. 16.08.2009ல் "சித்தாந்தச் செல்வர்" விருது பெறுதல்.

வெளியிட்ட நூல்கள் - உரை நூல்கள்: ஸ்ரீ தெய்வசிகாமணி தேசிகர் நான்மணிமாலை, இவர் மீதிலான சிற்குருமாலை; அருள்தரு வீரமாகாளி அம்மன் பாமாலை, அருள்தரு சண்முகநாதப் பெருமான் பாராயணப் பாமாலை, அருள்தரு தோகையடி விநாயகர் துதிக்கை மாலை, சிங்கைக் சிலேடை வெண்பா, போற்றி மடக்குப் பதிகம், பாம்பன் சுவாமிகளின் குன்றக்குடிப் பதிகம், பூவாளூர்த் தலப்புராணம், தொகுப்பு: விநாயகர், முருகன், அம்மை, அப்பன் மீது அருளாளர் வாக்கால் 1008 போற்றி, திருக்கோயில் வழிபாடு, கவிதை: அருள்தரு கற்பக விநாயகர் பதிகம், அருள்தரு சண்முக நாதப் பெருமான் மாத, வார பதிகங்கள், அருள்தரு குங்குமசுந்தரி அம்மைபதிகம், அருள்தரு வீரமாகாளி அம்மைபதிகம், கல்லூரிப் பாடநூலாகவும், எம்.ஃபில், ஆய்வேடாகவும் அமைந்த "நெஞ்சுவிடுதூது". நினைவு மலர்கள்: தோகூர்ப் பண்ணை மு.சுப்பிரமணியன் செட்டியார், இனக்காரியக்காரர் அ.ந.சம்பந்தஞ் செட்டியார் மீதில். கட்டுரைகள்: அருள்நெறித்தந்தை குன்றக்குடி அடிகளார் அவர்களின் வரலாறு கூறும் "காலமாய் நிற்கும் காட்சி", இதழ்களில் கருத்தரங்கங்களில் இடம்பெற்ற கட்டுரைகள்.

தொடர் கட்டுரைகள்: ஸ்ரீ குமரகுருபரர் அடிச்சுவட்டில் தன் முன்னேற்றக் கருத்துகள், ஸ்ரீ குமரகுருபரர் அருந்தமிழில் சைவ சித்தாந்தம்.

படித்தல், எழுதுதல் மட்டுமேபணி.

மயூரகிரி முருகர் அநுபூதி சந்த வருகைப் பதிகம்

-: நூலாசிரியர் :-

மதுரகவி ஆண்டவர்

-: உரைவிளக்கம் :-

ஆதீனப்புலவர் **க.கதிரேசன்**

குன்றக்குடி

அருள்தரு சண்முகநாதப்பெருமான் மீது

மதுரகவி ஆண்டவரின்

சந்த வருகைப் பதிகமும் குன்றக்குடி முருகர் அநுபூதியும்

வெளியிடுகின்றவர்கள்

தீருக்கமிலாய பரம்பரை குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனகர்த்தர்(46)

திருப்பெருந்திருதெய்வசிகாமணி

பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள்

அவர்கள்

நாள்: 13.06.2011

உரை விளக்கம்:

குன்றக்குடி ஆதீனப்புலவர். சைவத்தமிழ்மணி. சித்தாந்தச் செல்வர்

வித்துவான் க.கதிரேசன் எம்.ஏ., பி.எட்.,

பூவாளூர்-621 712.

வெளியீடு:

திருத்தவத்துறைத் தமிழ்ச் சங்கம்

திருத்தவத்துறை-621 601.

பதிப்புரிமை: குன்றக்குடி ஆதீனத்திற்கே

விலை: ரூ. 30/-

உள்ளுறை

		பக்கம்
1.	அருளாசியுரை தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள்	1
2.	அருளாசியுரை முனைவர்.ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள்	4
3.	தோரணவாயில்	7
4.	நூல்கள்	
	1. சந்தவருகைப்பதிகம்	10
	2. குன்றக்குடி முருகர் அநுபூதி	33
5.	செய்யுள் அகர நிரல்	80

உ

சிவ சிவ

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்,

குன்றக்குடி - 630 206.

சிவகங்கை மாவட்டம். ☎: 04577 264227

நாள்: 31-5-2011

வாழ்த்துரை

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் குன்றக்குடி சார்ந்த செட்டிநாட்டுப்பகுதியில் தோன்றிய அருட்புலவர்களில் மதுரகவி ஆண்டவரும் ஒருவர். மதுரகவி ஆண்டவர், மயூரகிரி ஆண்டவனாகிய அருள்தரு சண்முகநாதப்பெருமான் மீது வற்றாத. முற்றாத அன்பு பூண்டொழுகியவர்; தமிழ் மொழியைத் துறைபோகக் கற்றறிந்தவர்; நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் முதலிய தமிழ்ப்பேரறிஞர்களைச் சுற்றமாகக்கொண்டு பழகியவர்; குன்றக்குடி மலைமீது எழுந்தருளியிருந்து வேண்டுவார் வேண்டுவதே நல்கும் ஆறுமுகச் செவ்வேளின் திருவடிகளே பற்றாகக் கொண்டு வாழ்ந்தவர். அதுமட்டுமின்றிக் குன்றக்குடிப் பகுதியிலேயே சிலகாலம் தங்கியிருந்து வழிபட்டவர் என்றும் அறிகிறோம்.

இத்தகைய அருட்புலவர் மதுரகவி ஆண்டவர் குன்றக்குடி முருகன் மீது பலவகையான பிரபந்தங்கள் இயற்றிக் கவிமாலை சூட்டி மகிழ்ந்துள்ளார். அவற்றுள் அருள்தரு சண்முகநாதப்பெருமான் மீது பாடிய சந்த வருகைப் பதிகம் என்ற கவிமாலையும். மயூரகிரி முருகர் அநுபூதி என்ற கவிமாலையும் நமது ஆதீனப்புலவர் திரு.க. கதிரேசன் அவர்கள் உரையுடன் நூல்வடிவம் பெற்று இந்த ஆண்டு வைகாசி விசாகப் பெருவிழாவில் வெளியிடப்பெறுகிறது.

ஆதீனப்புலவர் க.கதிரேசன் அவர்கள் முறையாகத் தமிழ் கற்ற புலவர்; தமிழ் இலக்கியங்கள் பலவற்றை நுனித்துணர்ந்து கற்றவர்; இலக்கணப் புலமை சிறந்தவர்; ஏறத்தாழ முப்பத்தைந்து

ஆண்டுகளாகக் குன்றக்குடி மேல்நிலைப்பள்ளியில் பணியாற்றிக் குன்றக்குடியிலேயே வாழ்ந்து குன்றக்குடிக் காற்றைச் சுவாசித்தவர். தமிழ்மாமுனிவர் அருள்நெறித் தந்தை அவர்களிடம் நெருங்கிப் பழகியவர். இத்தகைய பெரும்புவலர், மதுரகவி ஆண்டவரின் சந்தவருகைப்பதிகத்திற்கும், மயூரகிரி முருகன் அநுபூதிக்கும் குறிப்புரை, பொழிப்புரை, விளக்கம், இலக்கணக்குறிப்பு ஆகியன எழுதியிருப்பது மிக்க மகிழ்வளிக்கிறது. இந்தக் குறிப்புரை, பொழிப்புரை, விளக்கம், இலக்கணக்குறிப்பு ஆகியன இந்த நூல்களைப் படித்து உணர விரும்பும் அன்பர்களுக்குக் கைவிளக்காக அமைந்துள்ளன. மேலும் ஆசிரியர் மதுரகவி ஆண்டவரின் ஆழங்கால்பட்ட புலமையையும், பக்தி உணர்வையும் குன்றக்குடி முருகப்பெருமானின் அளப்பரிய மாண்பையும் தெளிவுபடுத்துகின்றன.

சந்தவருகைப் பதிகத்தில்

கவுணியர் குலம்வரு சுதனே வருக

கடவுளர் பரவிடு பதனே வருக

- என்ற வரிகளுக்கு

உரையாசிரியர் தரும் விளக்கம் அருமையிலும் அருமை.

முருகப்பெருமானே திருஞானசம்பந்தராகப் பிற்நதார் என்பது பிறன்கோள் கூறலே தவிர "பெம்மான் முருகன் பிறவான் இறவான் என்பது கந்தரனுபூதியாதலாலும் கருத்து முடிந்திடப் பரவும் காதலியார் (பகவதியார்) மணிவயிற்றில் உருத்தெரிய வரும் பெரும்பேறு உலகுய்ய உளதாக (திருத்தொண்டர் புராணம், திருஞானசம் ... (1926: 3-4) என்பது சேக்கிழார் வாக்கு ஆதலாலும் இவர்க்கு அது கருத்தன்று என்க. முருகன்பர சிவனாதலால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில் புரியும் பிரமன், மால், உருத்திரன், மகேசன், சதாசிவன் ஆகிய ஐவருக்கும் இவன் தலைவன் எனவே ஐவகைத் தொழில் செய்வோர்க்கும் நாயகன் என்பது குன்றக்குடிக் கலம்பகம் ஆதலின் இவனைக் கடவுளர் - பரவிடுபதன் என்றார் --என்று உரையாசியர் நம் ஆதீனப் புலவர் க.கதிரேசன் அவர்கள் தரும் விளக்கம் அவர்தம் பரந்த சமய இலக்கிய அறிவுக்கு எடுத்துக்காட்டாகும்.

மயூரகிரி முருகர் அநுபூதி, அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த கந்தர் அநுபூதி போன்ற யாப்பு அமைதியும், ஓசைநலமும் மெய்யியல் உண்மையும் நிறைந்த 51-திருப்பாடல்களையும் கொண்ட அருமையான நூல். பாடுவோர் நெஞ்சத்தை மயூரகிரி முருகன் திருவடியில் பதியவைக்கும் ஆற்றல் படைத்தவை. இந்த அநுபூதி நூலின் ஐந்தாம் திருப்பாடலுக்கு உரை ஆசிரியர் எழுதியுள்ள விளக்கம் பலகாலும் படித்துணரத்தக்கது.

"மறைதேடும் இளங்கிளியே" -என்ற தொடருக்கு "பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய பாமேவு தெய்வப் பழமறையும் ... காணாத போதமாய்" என்ற கந்தர் கலிவெண்பாவை உள்ளடக்கியது - என்று உரையாசிரியர் எடுத்துக்காட்டி விளக்கியிருப்பது அருமை.

இந்நூலின் உரையாசிரியர் இதற்கு முன் சமய நூல்கள் பலவற்றுக்கு உரை எழுதிய பெருமைக்குரியவர், உண்மையான இறையன்பும், சைவத் திருமுறைகளிலும் அருள் நூல்களிலும் ஆழங்கால்பட்ட புலமையுமுடையவர் ஆதலால் தெய்வப் பனுவல்களுக்கு இவர் எழுது[illegible] உரை, மூலநூலின் உண்மைப்பொருளைத் தெ[illegible]ற விளக்குவதாகவே இயல்பாக அமைந்து விடுகிறது. இ[illegible]வகையில் இந்த இருநூல்களின் உரையும் மிகச்சிறப்பாக அமைந்திருக்கிறது. உரையாசிரியருக்கு நமது உளம் நிறைந்த பாராட்டுக்கள், வாழ்த்துக்கள், இதுபோன்ற இன்னும் பல தெய்வப் பனுவல்களுக்கு உரை எழுதி சமய உலகுக்கு உதவவேண்டும் என்பது நமது விருப்பம். இதில் உள்ள சந்த வருகைப்பதிகத்தையும், மயூரகிரி முருகர் அநுபூதியையும் உரையின் துணைகொண்டு பொருளுணர்ந்து ஓதி, ஓதி குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப்பெருமான் திருவருள் பெற்று உய்தி பெறுவோமாக.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

உ

குருபாதம்

தந்தை தாயும் நீ; என்னுயிர்த் துணையும் நீ
சஞ்சல மதுதீர்க்க
வந்த தேசிக வடிவும் நீ; உனையலால்
மற்றொரு துணை காணேன்;
அந்தம் ஆதியும் அளப்பெருஞ் சோதியே!
ஆதியே அடியார்தம்
சிந்தை மேவிய தாயுமா னவன்எனும்
சிரகிரிப் பெருமானே!

- ஸ்ரீ தாயுமான சுவாமிகள்

முனைவர்.

ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள்,

எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்.டி.

கட்டளை விசாரணை
தருமையாதீனம் ஸ்ரீ மௌனமடம்–மலைக்கோட்டை
திருச்சிராப்பள்ளி–620 002.
போன்: 0431-2702472. செல்: 9443150332

நாள்: 25-5-2011

திருமுருகன், குன்றுதோறும் குடியிருந்து அருளுகின்ற பெருமான். சங்க இலக்கியம் தொடங்கி இந்நூற்றாண்டுவரை முருகப்பெருமானைப் போற்றுகின்ற பலநூல்கள் விளங்குகின்றன.

குன்றிலுயர் குன்றக்குடித் திருத்தலத்தில் எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் முருகப் பெருமானைப் போற்றி மதுரகவி ஆண்டவன் பதினெட்டு நூல்கள் அருளிச் செய்திருக்கின்றார். அவ்வகையில் "சந்த வருகைப்பதிகம்", "மயூரகிரி முருகர் அநுபூதி" இரண்டு நூல்களை எழுத்துப் பிழை களைந்து, சந்தி பிரித்து குறிப்புரை, பொழிப்புரை, விளக்கம், இன்றியமையா இலக்கணக்குறிப்பு ஆகியவற்றினை எழுதி நமது பாராட்டுதலுக்கும், அன்பிற்கும் உரிய குன்றக்குடி ஆதீனப்புலவர் க.கதிரேசன் அவர்கள் வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சி.

உரையாசிரியர்கள் மூலம்தான் மூலநூல்களின் கருத்துக்களை வெளிக்கொணர முடிகிறது. உரையாசிரியர்களாக

விளங்குகின்றவர்கள் நுண்மாண் நுழைபுலமும், பல நூல்கள் கற்றுத் தேர்ந்த அறிவும் மிக்கவர்களாக இருக்கவேண்டும். அவ்வகையில் கதிரேசன் அவர்கள் தம்முடைய தமிழ்ப் புலமையும், பரந்து பட்ட பலநூல் ஆய்வின் குறிப்பும் அவருடைய உரை விளக்கத்தில் காண்கிறது. கந்த புராணம், குமரகுருபரருடைய பிரபந்தங்கள், தாயுமானவரின் பாடல்கள், இராமலிங்க சுவாமிகளின் பாடல்கள், திருமுறைகள், சாத்திர நூல்கள், சங்க இலக்கிய நூல்கள் மேற்கோள் காட்டியிருப்பது சிறப்பாக அமைந்திருக்கிறது.

சந்த வருகைப்பதிகத்தில் 2வது பாடலில் "ஒரு முதல் எனும் ஒரு பொருளே" என்பதற்கு "அனைத்துக்கும் மூலகாரணமாக விளங்குகின்ற பெருமான் முருகப்பெருமான்" என்ற பொருளில் விளக்கிப் பலநூல் மேற்கோள்களையும் செய்திருக்கிறார். மூன்றாவது பாடலில் "கவுணியர் குலம்வரு சுதனே" என்பதற்கு, குழந்தை வடிவில் தோன்றிய சீர்காழி ஞான சம்பந்தபிள்ளையார் என எழுதிவிட்டு, விளக்க உரையில் முருகப்பெருமானே திருஞானசம்பந்தராகப் பிறந்தார் என்பது "பிறன்கோள் கூறலே" தவிர "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்ற கந்தரநுபூதி நூல் ஆசிரியனுடைய உள்ள உணர்வை அறிந்து விளக்கம் தந்திருக்கிறார். முருகப் பெருமானும் சிவனும் ஒருவரே என்ற குறிப்பினால் ஞானப் சம்பந்தப் பிள்ளையார் முருகப் பெருமானின் அவதாரம் என்பதை ஏற்றுக்கொள்ள உரையாசிரியரின் மனம் இடம் தரவில்லை. முருகப் பெருமானுடைய சாரூபம் திருஞான சம்பந்தர் பெற்றார் என்று காட்டும் முடிவில் "பிறன்கோள் கூறல்" என்று நூல் ஆசிரியர் மீது பழிவராமல் காட்டும் செயல் தெரிகின்றது. "வழுதி கூன் நிமிர்த்திய பெருமாளே" என அருணகிரியாரும், "சைவம் தழைக்கத் தழைத்தாண்டி, ஞான சம்பந்தன் பேர் கொண்டழைத்தாண்டி" என, "இராமலிங்க சுவாமிகளும் ஆசிரியர் கருத்து அமைந்த வகையில் கூறுவன நோக்கத் தக்கதாகும்.

ஆசிரியர் தம்முடைய இலக்கண அறிவையும் பல இடங்களில் பரந்து பட்டு வெளிப்படுத்துகிறார். சங்கு என்ற முதற்பொருள் அதனின் ஆன சினைக்கு ஆனமையின் சங்கு முதலாகு பெயர் என்றும், வெண்ணீறொடு என்பது வெணீறொடு என்று இடைக்குறையானது என்றும், கவுணியர் குலம்–இருபெயரெட்டுப் பண்புத் தொகை என்றும். பதினெண் கணங்களாவார் யார் என்ற பட்டியலும் அமைத்திருப்பது சிறப்புக்குரியது. மயூரகிரி முருகர் அநுபூதி நூல், கந்தரநுபூதியினுடைய நடையும், யாப்பும், சந்தமும் கொண்டு விளங்குகிறது.

"சிந்தா குலமானவை தீர்த்திடவே" என்ற பாடலும் கந்தரநுபூதி பாடலோடு ஒப்புநோக்கதக்கதாக அமைகின்றது. இப்பாடலில் "எந்தாய்" என்கின்ற சொல்லாட்சியை எம்தாயே, எம் தந்தையே என்றும் காட்டி குமரகுருபரரின் பாடலை மேற்கோள் காட்டியிருப்பது சிறப்பாக அமைந்திருக்கிறது. 23வது பாடலில் "அஞ்சொன்றுட நாலதுவாய்" என்கின்ற பாடலுக்கு ஐந்து பூதங்கள், ஐம்பூதத் தன்மாத்திரைகள், அனைத்துக்கும் தலைவராக விளங்கும் ஐவர், இவர்களின் மேலான சிவபெருமானின் ஐந்து திருமுகங்கள், அவற்றோடு அதோமுகமும் தந்து ஆறுமுகம் எனக் காட்டுவதும், குமரகுருபரருடைய "ஐந்து முகத்தோடு அதோமுகமும் தந்து" என்ற பாடலுக்கு விளக்கம் காட்டியிருப்பதும், 24-வது பாடலில் பஞ்சாட்சரம், தூலபஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம், காரண பஞ்சாட்சரம், மகாகாரணபஞ்சாட்சரம் இவற்றை எடுத்துக் காட்டியிருப்பது உள்ளிட்ட பலநிலைகளில் குன்றக்குடி ஆதீனப் புலவர் கதிரேசன் அவர்கள் மிகச் சிறப்பான உரையை இந்த நூலினில் செய்திருக்கிறார்.

இதுபோன்று மற்றைய நூல்களுக்கு உரைநூல்கள் வெளியிட வேண்டும். நூலாசிரியர்கள் பிரம்மதேவனை விடமேலானவர்கள் காரணம்: பிரம்மதேவன் கொடுக்கின்ற உடம்பானது சீக்கிரம் அழிந்து விடுகிறது. நூலாசிரியர் செய்கின்ற நூல்கள் எந்நாளும் நிலைத்து நிற்கின்றன. அதனைக் குமரகுருபரர்.

"கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்ட மிழோர்க்கொவ்வான் – மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு" *என்று காட்டுவார்*

"ஓதிநன்னூல் கற்றார் பரவப் பெருமையுடையன" என்ற அப்பர் சுவாமிகள் வாக்கிற்கிணங்க

நூலாசிரியரின் உணர்வுகள் மாறாமலும். உரையாசிரியரின் மரபு மாறாமலும் ஆசிரியர் உள்ளக்குறிப்பினை வெளிப்படுத்தும் நிலையும், உரைவளமும், பாங்கும் மிளிர்கின்றது. திரு.க.கதிரேசன் அவர்களுக்கு எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கநாதப்பெருமான் திருவருளும் தருமை ஆதீனக் குருமணியினுடைய குருவருளும் கிடைக்கப்பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

– மௌன குமார சுவாமித் தம்பிரான்.

உ

தோரணவாயில்

அடியார்கள் வாழ்வாக விளங்கும் ஆறுமுக அப்பன் – அருள்தரு சண்முகநாதப்பெருமான், குன்றிலுயர் குன்றக்குடித் திருத்தலத்தில் வற்றாத திருவருளை வாரி வழங்கும் வள்ளலாக, நம் இருதாயராகிய அருள்தரு வள்ளிநாச்சியார் (இச்சை) அருள்தரு தெய்வயானை யம்மையார் (செயல்) ஆகிய இருவரும் தனித்தனிமயில் ஏறிப் புடைசூழ, தான் 'வாசி' எனும் மயிலேறி ஞானவேல் ஏந்தி வீற்றிருக்கின்றான். அன்று முதல் இன்றுவரை இப்பெருமான் அருளிவரும் திருவிளையாடல்கள்–அருளிப்பாடுகள் எண்ணிலடங்கா.

வேண்டுவார் வேண்டுவதே ஈயும் இப்பெருமான், தன் அடியார்களிடம் வேண்டிப் பெறும் பெருவிருப்பம் உடையவன் என்பது வரலாறு கூறும் உண்மை. இதற்குச் சான்றாக விளங்குவதே "ஸ்ரீ மயூரகிரி சண்முகப் பிரபந்தம்" என்ற அரிய பதினெட்டு நூல்களின் தொகுப்பு.

இன்றைய தேவகோட்டைக்கு மேற்பால் உள்ளது, வேப்பங்குளம் என்ற திருவூர். இவ்வூரவரான அறவோர் சோணைமுத்து அம்பலகாரர். இவரது திருமகன் முத்தையப் பாவலர். இவரது கனவில் குன்றக்குடி அருள்தரு சண்முக நாதப்பெருமான் எழுந்தருளி,

".....
புத்திர நமதருள் புரிந்தனம் உமக்கு
நம்பராக் கிரம நயமதை விமரிசை
சம்பிர மத்துடன் சண்முகப் பிரபந்
தம்ஒன்று பாடுக தனயா"

என்று அருள எழுந்ததே இம் மயூரகிரி சண்முகப்பிரபந்தம். இந்நூல் 18 நூல்களைத் தம்முட்கொண்டதொரு தொகை நூல். அவை மயூரகிரி குமரகுருபரக் கடவுள், திருவிளையாடல், பால்யத் திருவிளையாடல், பராக்கிரமம், ஆண்டருள் என வேண்டுதல் ஆகிய பதிகங்களுடன் மாதப்பதிகம், வாரப்பதிகம், போற்றி மடக்குப் பதிகம்,

சரணப்பத்து, சந்தவருகைப் பதிகம், மயூரகிரி முருகன் அநுபூதி, மயூரகிரி அந்தாதி, ஸ்ரீமயூரகிரி சுப்பிரமணியர் மீது வெண்பாமாலை, அத்துவித பஞ்சரத்ன வெண்பா, எக்காலக்கண்ணி, ஸ்ரீமயூரகிரி திருப்புகழ், நாமாவளி, கீர்த்தனைகள், வாழிசந்த விருத்தம் என்பன. இவையனைத்தும் வெண்பா, சந்தப்பா, கீர்த்தனம், ஆசிரியப்பா, கலித்துறை, கண்ணி, திருப்புகழ்ச் சந்தம், இந்துஸ்தானி மெட்டு, புதுச்சந்தவகை முதலியவற்றால் அமைந்து திருவருளை வழங்குகின்றன. இவற்றுடன் "சிதம்பரம் ஸ்ரீநடராசர் மீது இயற்றிய நடனப்பதிகமும்" இத்தொகை நூலில் இடம்பெற்றுள்ளது.

இந்நூல்களுக்கு மகிழ்ந்த குன்றக்குடியான் மீண்டும் இவர்கனவில் தோன்றி, "மதுரகவி" என்ற காரணப்பெயர் கொண்ட பட்டமும் வழங்கினான். இச்செய்திகள் அனைத்தையும், இந்நூலுக்குச் சாத்துக்கவிகள் தந்துள்ள மதுரகவி பெ.பெருமாள் ஆசாரியார், அருட்கவி ம.கா.செய்க்கப்துல் காதிறு, மகுமுது முத்துப் பாவாப் புலவர், மு.முத்துவயிரக் கவிஞர் ஆகியோர் கவிதைகள் வழங்கியுள்ளன.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்த இந்நூல்கள், அனைத்தையும் ஒருசேர 1913இல் மு.கரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் முதன் முதலாக அச்சிட்டு வழங்கியுள்ளார்.

தற்போது அருமையான, "சந்த வருகைப்பதிகம்", "மயூரகிரி முருகர் அநுபூதி" இரண்டு மட்டும், எழுத்துப்பிழை களைந்து, சந்தி பிரித்து, குறிப்புரை, பொழிப்புரை, விளக்கம், இன்றியமையா இலக்கணக்குறிப்பு ஆகியவற்றுடன் ஒரே நூலாக வெளிவருகிறது.

எனது பிறநூல்களுக்கு வழங்கியுள்ளது போலவே, இந்நூலுக்கும் பணிச்சுமைகளுக்கிடையே தமது அருளார்ந்த வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்துள்ள திருக்கயிலாய பரம்பரை குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனக் குருமகாசந்நிதானம், வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் வழிபாட்டிற்கும் உரிய **திருப்பெருந்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள்** அவர்களின் பொன்னார் திருவடிகளை மனம் மொழி மெய்யால் வணங்கி மகிழ்கிறேன்.

இந்நூலின் முருகர் அநுபூதி பாடல் 27இல் வரும் முதல் இரண்டடிகளில், கூறியது கூறவில்லை, இங்ஙனம் கூறும் மரபு உண்டு என்பதற்குப் பட்டினத்து அடிகளின் பாடற்பகுதி மேற்கோளும் காட்டியருளிய வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் வழிபாட்டிற்கும் உரிய திருப்பனந்தாள் காசித்திருமடத்தின் **கயிலைமாமுனிவர் காசிவாசி எசமான் சுவாமிகள்** அவர்களின் பொன்னார் திருவடிகளை மனம் மொழி மெய்யால் வணங்கி மகிழ்கின்றேன்.

தமது இலண்டன் பயணவேலைகட்கிடையே இந்நூலுக்கு அருளார்ந்த ஆசியுரை வழங்கிச் சிறப்பித்துள்ள வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் வழிபாட்டிற்கும் உரிய திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை தருமையாதீனம் ஸ்ரீமௌனமடம் கட்டளை விசாரணை சுவாமிகள் **முனைவர் ஸ்ரீமத் மௌன குமார சுவாமித்தம்பிரான் சுவாமிகள்**, எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி அவர்களின் பொன்னார் திருவடிகளை மனம் மொழி மெய்யால் வணங்கி மகிழ்கிறேன்.

திருவருளும் குருவருளும் கூட்டுவிக்குமானால் குன்றக்குடிப் பெருமான் நூல்களனைத்தையும் இவ்வகையில் வெளியிட ஆவல். இந்நூலை அச்சிட்டு வழங்கும் திருத்தவத்துறைத் தமிழ்ச் சங்கத்தலைவர் ஆகிய பெரும்புலவர் **ப.அரங்கசாமி** ஐயா அவர்கட்கும் திருத்தவத்துறைத் தமிழ்ச் சங்கத்து நிறுவுநரும் செயலாளரும் ஆகிய **புலவர்.புவியரசு**,பி.லிட் அவர்களுக்கும் என் கனிவான நன்றி, வணக்கம்.

இதனைச் சிறந்த முறையில் அச்சிட்டுள்ள **விடெக் கம்ப்யூட்டர்ஸ், உத்தமர் கோவில்** அச்சகத்தாருக்கு என் நன்றியுரியது. வணக்கம்.

பூவாளூர்.
01.6.2011.

பணிவன்புள்ள,
க.கதிரேசன்

உ

குன்றக்குடி

அருள்தரு சண்முகநாதப்பெருமான் மீது

மதுரகவி ஆண்டவரின்

சந்த வருகைப்பதிகம்

1. திருமரு விடும்அரி மருகா வருக
சிவகுரு பரன்எனும் முருகா வருக
தினகரன் ஒளிஎனும் முகனே வருக
திரிபுரை அருளிய மகனே வருக
மருமலர் தனைஅணி புயனே வருக
வளமிகு சிவகிரி அயனேவருக
மணிஒளி திகழ்வுறு முடியாய் வருக
மலைகளில் அமர்வுறு குடியாய் வருக
குருமுனி பரவிடு குகனே வருக
குணமுள அடியவர் அகனே வருக
குறமகள் மருவிடு கணவா வருக
குயில்மொழி அனைவள் துணைவா வருக
கருணையை உதவிட விரைவாய் வருக
கருமுகில் படிசிகி மலையாய் வருக
கனமுடன் ஒளிவிடு கதிவே லுடனே
கந்தா வருகக் கதியதுதரவே

குறிப்புரை: சிவகுருபரன்=சிவனேயான மேலானகுரு. திரிபுரை=பார்வதிதேவி. மரு=மணம். அயனே=அனைத்துக்கும் ஆதாரமானவனே. குடி= வாழ்விடம். குயில்மொழி அனையவள்=குயில்போன்று இன்மொழி

கூறும் தெய்வயானையம்மை. சிகிமலை=குன்றக்குடி மயில்மலை. கனம்=பெருமை. கதிர்=ஒளி-ஞானம். கதி=வீடுபேறு.

பொழிப்புரை: திருமகள் தழுவும் திருமால் மருகனே வருக: சிவனேயான மேலானகுருவே வருக; ஞாயிற்றின் ஒளியாக விளங்கும் திருமுகனே வருக; பார்வதிதேவி அருளிய திருமகனே வருக; மணம்மிக்க மலர்மாலை அணியும் திருத்தோளனே வருக; வளமை மிக்க சிவகிரியிலும் எழுந்தருளியுள்ள அனைத்துக்கும் ஆதாரமானவனே வருக; நவமணிகள் ஒளிவீசும் திருமுடி சூடியவனே வருக; மலைகளை வாழ்விடமாகக் கொண்டு எழுந்தருளியவனே வருக; அகத்திய முனிவர் தொழும் குகனே வருக; நற்குணத்து அடியவர் உள்ளத்தில் உள்ளவனே வருக; வள்ளி நாச்சியாரை மணந்த கணவனே வருக; குயில்போன்று இன்மொழி கூறும் தெய்வயானையம்மையின் துணைவனே வருக; உன் கருணையை அருள விரைந்து வருக; கார்மேகம் படியும் குன்றக்குடி மயில்மலையில் எழுந்தருளியுள்ளவனே வருக; பெருமை பொருந்த ஞான ஒளிவீசும் வேலுடன் வீடுபேறு அருளக் கந்தனே வருக.

விளக்கம்:

ஆதலின் நமது சத்தி அறுமுகன்; அவனும் யாமும்
பேதகம் அன்றால்; நம்போல் பிரிவிலன்; யாண்டும் நின்றான்;
ஏதமில் குழவிபோல்வான்; யாவையும் உணர்ந்தான்; சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருள வல்லான்
-கந்தபுரா. உற்பத்தி..19

என்ற சிவபெருமான் திருவாக்கினை உட்கொண்டு "சிவகுருபரன் எனும் முருகா" என்று விளித்தார்.

"குருமுனிபரவிடும் குகனே" என்றது; "தொழும் முனிவனொடும் உள்ளன்பு உடையானை", "குறுமுனிதன் அகத்தானை" என்ற இவரது போற்றி மடக்குப் பதிகப் பகுதிகளை நினைவூட்டும்.

இலக்கணக்குறிப்பு: குறுமுனி எனற்பாலது குருமுனி என்றுவந்தது, எதுகைநோக்கிய செய்யுள் விகாரம். வருக என்பன வேண்டிக்கோடற் பொருளில் வந்த வியங்கோள் வினைமுற்றுகள்.

2. ஒருமுதல் எனும்ஒரு பொருளே வருக
உலகினை அருளிய அருளே வருக
உவரியில் வரும்ஒரு மணியே வருக
உரகர்கள் முடிபுனை அணியே வருக
அருஎனும் உருஎனும் அமலா வருக
அடியவர் பரவிடு விமலா வருக
அரிபதி உதவிய குமரா வருக
அசுரரை வெருவிய சமரா வருக
பெருகிடு மதுநதி யுடையாய் வருக
பெருமத களிறெனும் நடையாய் வருக
பிரணவ ஒளிவரு வடிவே வருக
பிரபலம் உளமறை முடிவே வருக
கருணையை உதவிட விரைவாய் வருக
கருமுகில் படிசிகி மலையாய் வருக
கனமுடன் ஒளிரிடு கதிர்வே லுடனே
கந்தா வருகக் கதியது தரவே.

குறிப்புரை: ஒரு முதல் = மூலகாரணன் ஆகிய ஒப்பற்ற கடவுள். உவரி = கடல். மணி = முத்து, ஞாயிறும் ஆம். உரகர் = நாகருலகினர். அமலா = புனிதனே. விமலா = தூயவனே. அரி = தேவேந்திரன். வெருவிய = அஞ்சச் செய்த. மதுநதி = குன்றக்குடியருகில் ஓடும் தேனாறு. பிரபலம் = புகழ். மறைமுடிவு = உபநிடதம்.

பொழிப்புரை: அனைத்துக்கும் மூலகாரணன் ஆன ஒப்பற்ற கடவுளே வருக. உயிர்க்குல ஈடேற்றத்தின் பொருட்டு உலகைப் படைத்த அருள் வடிவானவனே வருக; கடலில் தோன்றும் முத்தாக/ஞாயிறாக விளங்குகின்றவனே வருக; நாகருலகவர் தம் முடியில் சூடும் அணிகலனாக விளங்குகின்றவனே வருக; அருவமும் உருவமும் ஆன புனிதனே வருக; அடியார்கள் போற்றும் தூயவனே வருக; தேவேந்திரனுக்கு அவன் நாட்டை மீட்டுத்தந்த குமரனே வருக; அசுரர்களை அஞ்சச்செய்த போர்வல்லவனே வருக; நீர்பெருகும் தேனாறு உடையவனே வருக; ஆற்றல் மிக்க மதயானையின் நடையுடையவனே வருக; பிரணவ ஒளியில் தோன்றும் அழகே வருக; புகழ்வாய்ந்த உபநிடதப்பொருளாய் உள்ளவனே வருக. உனது திருவருளை விரைந்து வழங்க வருக; கார்மேகம் படியும் குன்றக்குடி மயில் மலையில் எழுந்தருளியுள்ளவனே வருக; பெருமை பொருந்த ஞானஒளிவீசும் வேலுடன் வீடுபேறு அருளக் கந்தனே வருக.

விளக்கம்: "ஒரு முதல் எனும் ஒரு பொருள்" என்றது, "மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும் மூலகாரணமாய் நின்ற மூர்த்தி" என்று சூரபன்மன் ஆகிய பகைவன் புகழ்ந்த முருகனது பெருநிலை குறித்தது. "உவரியில் வரும் ஒரு மணி" என்றது, முருகனுக்கு உவமையாகத் திருமுருகாற்றுப்படை கூறும் "உலகம்

உவப்பவலன் ஏர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு" என்ற உவமையையும் நினைவூட்டும். "பிரணவ ஒளிவரு வடிவே" என்றது. "ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு தூங்கார் தொழும்பு செய்யார் என்செய்வார் எமதூதருக்கே" என்ற கந்தரலங்காரம் பகுதியையும், "ஓங்காரத்து உள்ஒளிக்கும் உள்ஒளியாய்" என்ற கந்தர் கலிவெண்பாப் பகுதியையும் நினைவூட்டும்.

இலக்கணக்குறிப்பு: உவர் = உப்புச்சுவை; எனவே உவரி என்பது காரணம் பெயராய்க் கடல் குறித்தது.

3. கவுணியர் குலம்வரு சுதனே வருக
கடவுளர் பரவிடு பதனே வருக
கஜமுக கணபதி இளையாய் வருக
கணர்கள் பரிவுறு பணையாய் வருக
பவவினை யதுபொடி படவே வருக
படிவலம் வருமயி லுடனே வருக
பரிவுடன் உனதருள் தரவே வருக
பதியினை இனிதொடு பெறவே வருக
தவமது புரிபவர் தனமே வருக
தரணியில் உயர்வுறு கனமே வருக
தனதெனும் தமது செலவே வருக
தலையினில் ஒளிரிடு நிலவே வருக
கவுரவம் உறஇது ததிநீ வருக
கருமுகில் படிசிகி மலையாய் வருக
கனமுடன் ஒளிரிடு கதிர்வே லுடனே
கந்தா வருகக் கதியது தரவே.

குறிப்புரை: சுதன்=தூயமகன்–திருஞானசம்பந்தர். பதன் = திருவடியன். கணர் = பதினெண்கணத்தர். பரிவு = இன்பம். பணை=பெருமை. பவவினை = பிறவிக்குக் காரணமாய்ப் பிறவிதோறும் ஈட்டியவினைகள். படி=உலகம். பதி=வீடுபேறு. கனம்=நிறைவு. தனது=எனது என்ற புறப்பற்று. தலை = வானம். திதி=தக்க சமயம்.

பொழிப்புரை: சீர்காழிக் கவுணியர் குலத்துத் தூயமகனாகிய திருஞானசம்பந்தரே வருக; பிறகடவுள் அனைவரும் வணங்கும் திருவடியுடையவனே வருக; யானைமுகத்து விநாயகருக்கு இளையவனே வருக; பதினெண் கணத்தவரும் இன்புறக் காரணமான பெருமையனே வருக; பிறவிக் கட்டுக்காரணமாய்ப் பிறவிதோறும் ஈட்டியவினைகள் பொடிபட வருக; கனியின் பொருட்டு உலகை மயில் மீது அமர்ந்து வலம் வந்தவனே வருக; அன்புடன் உனது அருள்தர வருக; நாங்கள் வீடுபேற்றினை இனிமையுடன் பெறவருக; தவத்தோரின் செல்வமே வருக; உலகில் உயர்ந்த நிறைவாய் விளங்குகின்றவனே வருக. எனது என்ற புறப்பற்று எம்மை நீங்க வருக; வானில் ஒளிரும் வெண்ணிலவே வருக; நாங்கள் மேன்மையுற இது தக்க சமயம் ஆதலின் இப்போது வருக; கார்மேகம் படியும் குன்றக்குடி மயில்மலையில் எழுந்தருளியுள்ளவனே வருக; பெருமை பொருந்த ஞானஒளி வீசும் வேலுடன் வீடுபேறு அருளக் கந்தனே வருக.

விளக்கம்: முருகப்பெருமானே திருஞானசம்பந்தராகப் பிறந்தான் என்பது பிறன்கோள் கூறலே தவிர "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்பது கந்தரனுபூதி யாதலாலும், "கருத்து முடிந்திடப் பரவும் காதலியார்

பகவதியார்) மணிவயிற்றில் உருத்தெரிய வரும்பெரும்பேறு உலகுய்ய உளதாக" (திருத்தொண்டர் புராணம். திருஞானசம்.. (1926:3-4) என்பது சேக்கிழார் வாக்கு ஆதலாலும் இவர்க்கு அது கருத்தன்று என்க. முருகன்பர சிவனாதலால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் ஆகிய ஐந்தொழில் புரியும் பிரமன், மால், உருத்திரன், மகேசன், சதா சிவன் ஆகிய ஐவருக்கும் இவன் தலைவன் எனவே "ஐவகைத் தொழில் செய்வோர்க்கும் நாயகன்" என்பது குன்றக்குடிக்கலம்பகம் ஆதலின் இவனைக் "கடவுளர் பரவிடுபதன்" என்றார்.

பதினெண் கணங்களாவார்; தேவர், அசுரர், முனிவர், கின்னரர், கிம்புருடர், கருடர், இயக்கர், இராக்கதர், கந்தருவர், சித்தர், சாரணர், வித்தியாதரர், நாகர், பூதம், வேதாளம், தாராகணம், ஆகாயவாசிகள், போக பூமியர் ஆகியோர் என்பர். பிறவாறும் கூறுவர். "விடப்படும் முன்உடம்பின் வினை, இந்த உடல் விளைக்கும் தொடர்ச்சியால் ஒன்றுக்கொன்று தொன்றுதொட்டு அநாதி, வித்தின் இடத்தினின் மரம், மரத்தின் வித்தும் வந்து இயையுமா போல்" என்பது சிவஞான சித்தியாராதலின் அவன் அருளின்றேல் வினைப்பயனை நாம் துய்த்தே கழித்தல் இயலாது. அவனருளே வினைவீட்டுவது. "வினை ஓடவிடும் கதிர்வேல் மறவேன்" என்பது கந்தரனுபூதியாதலின் "பவவினையது பொடிபடவே வருக" என்றார். "ஒன்றின முடித்தல் தன்இனம் முடித்தல்" என்ற உத்தியால் "தனதெனும் தமது செலவே வருக" என்றாராயினும், புறப்பற்றுக்கு இனமான "யான் எனும் அகம் செலவே வருக" என்றும் முடிக்க.

இலக்கணக்குறிப்பு: கவுணியர் குலம் - இருபெயரெட்டுப் பண்புத்தொகை "கணபதி" என்ற சொல் "கஜமுகம்" என்ற இயற்கை அடைபெற்றது.

4. மடலுறு மதுவிழி மலரே வருக
மலரினில் அமைவறு மணமே வருக.
மணமதில் உறும்உயர் சுகமே வருக
வளமிகு நிழல்தரு தருவே வருக.
படர்கிளை தருஉறு பழமே வருக
பழமதில் உறும்இனி சுவையே வருக.
பலமது விழிதரு துடரே வருக
பணிகரை வழிவரும் அமுதே வருக.
திடமிகும் அசுரர்கள் எமனே வருக
சிரகிரி இலகுந லமனே வருக
தினம்உன திருவருள் தரவே வருக
திசைபுகழ் உனதடி உறவே வருக
கடலினில் உலவிடு கலமே வருக
கருமுகில் படிசிகி மலையாய் வருக
கனமுடன் ஒளிரிடு கதிர்வே லுடனே
கந்தா வருகக் கதியது தரவே.

குறிப்புரை: மடல் = கண்ணிரப்பை. மது = கருணைத்தேன். நிழல்=ஆதரவு. தருதரு=கற்பகமரம் தரும். பலம் = ஆற்றல். பலமது தருவிழி துடர் என்று கூட்டுக. துடர் = பற்று. பணிகரை= பணிந்து மனம் உருகும். வழி = ஒழுக்கம். நலமனே=நலம் அருளும் அரசே. உற=என் தலையில் பொருந்த. கடல் = பிறவிக்கடல். கலம் = மரக்கலம்.

பொழிப்புரை: கண் இரப்பையாகிய மடலுடன் கூடி, கருணைத் தேன் பெருகும் விழியாகிய மலரே வருக; அருள்புரிய அம்மலரில் அமைந்து பரவிச் சென்று நலம் சேர்க்கும் மணமே வருக; அந்நறுமணத்தால் அமையும் இன்பமே வருக; வளமைமிக்க ஆதரவு தரும் கற்பக மரமே வருக; அக்கற்பகத்தின் படர்ந்த கிளை தரும் ஒப்பற்ற கனியே வருக; அக்கனியிற் பொருந்திய இனிய சுவையே வருக; ஆற்றல் வழங்கும் விழிகள் தரும் பற்றே வருக; பணிதலுடன் மனம் உருகும் ஒழுக்கத்தால் வரும் அமுதமே வருக; ஆற்றல் மிக்க அசுரர்களுக்கு எமனே வருக; சிரகிரியில் விளங்கும் நலம் அருளும் அரசே வருக; உனது திருவருளை நாடோறும் தர வருக; எண்திசைகளும் புகழும் உனது அடியில் நாங்கள் பொருந்த - வணங்க வருக. பிறவிக்கடலிலிருந்து உயிர்க் குலத்தைக் கரையேற்ற அதில் உலவுகின்ற மரக்கலமே வருக; கார்மேகம் படியும் குன்றக்குடி மயில்மலையில் எழுந்தருளியுள்ளவனே வருக; பெருமை பொருந்த ஞான ஒளிவீசும் வேலுடன் வீடுபேறு அருளக் கந்தனே.

விளக்கம்: "அன்போடு உருகி அகம் குழைவார்க்கன்றி என்பொன் மணியினை எய்த ஒண்ணாதே-திருமந்திரம்; "நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே புக்குநிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்"-அப்பரடிகள் என்பவற்றை, பணிகரை வழிவரும் அமுதே" என்பது நினைவூட்டும். "பிறவியைப் பெருங்கடலாகவும், பெருமான் திருவடியைப் புணையாகவும்" கூறுவார் பொய்யாமொழியார். "நடுக்கடலில் கரைகாண முயன்றும் முடியாமல் களைத்துக் காக்கையொன்று, கண்டு அமர்ந்த கலத்தின் கூம்பு போன்றது உயிர்கட்கு அவன் திருவடி" என்பர். காக்கை-உயிர்.

கடல்-பிறப்பு. கப்பல் கூம்பு-பெருமான் திருவடி. தன் கூம்பில் அமர்ந்த காக்கையைக் கலம் கரைசேர்ப்பது உறுதியானாற் போன்றது அவனடி பற்றிய உயிர் வீடுபேறு பெறுவது உறுதி என்பது மெய்ப்பொருளியல் செய்தி.

இலக்கணக்குறிப்பு: பணி, கரை என்பன முதனிலைத் தொழிற் பெயர்கள். "கடலினில் உலவிடு கலமே" - ஏகதேச உருவகம்.

5. சரவண மதில்வரு குகனே வருக
சமணரை அழிபரை மகனே வருக
சவளகர் பரவிடு தனியே வருக
தகரினில் அமர்வறு கனியே வருக
குரவனை வெருவிய குணமே வருக
குமரபு ரியிலுறு மணமே வருக
குதுகல முடன்என தெதிரே வருக
குவலயம் உலவிடு கதிரே வருக
பரவெளி எனும்ஒரு துரியா வருக
பழனையில் இனிவு உறு பிரியா வருக
பழனியில் அமைவுறு துறையே வருக
பலமலை அதில்உறும் இறையே வருக
கரமிசை வெணிறொடு விரைவாய் வருக
கருமுகில் படிசிகி மலையாய் வருக
கனமுடன் ஒளிரிடு கதிர்வே லுடனே
கந்தா வருகக் கதியது தரவே

குறிப்புரை: சமணரை அழிபரை மகன் = திருஞானசம்பந்தர். சவளகர் = புளியின் முற்றிய பழமும் தோடும் போல

உலகப்பற்றற்றவர். (சுவளம்=புளியின் முற்றிய பழம்) தகர் = ஆட்டுக்கிடா. குரவன் = நான்முகன். வெருவிய = அஞ்சச்செய்த துரியா = கடவுளே. துறை=உயிர்க்குலத் தங்குமிடம். வெணிறு=திருநீறு.

பொழிப்புரை: சரவணப் பொய்கையில் வந்த குகனே வருக; சமணர்களை அழித்த பராசத்தியின் மகனான திருஞானசம்பந்தரே வருக; முற்றிய புளியம்பழமும் அதன் தோடும் போன்ற பற்றற்றவர்கள் பரவும் ஒப்பற்றவனே வருக; ஆட்டுக்கிடாமீது அமர்ந்து அதனைச் செலுத்தியவனே வருக; நான்முகனை அஞ்சச்செய்த நற்குணத்தனே வருக; குமராபுரியில் எழுந்தருளியுள்ள நறுமணமே வருக; அகக்களிப்புடன் எனது எதிரே வருக; உலகம் முழுதும் உலவும் ஞாயிறே வருக; பரவெளியாக விளங்கும் ஒப்பற்ற கடவுளே வருக; பலர் கூடிச் செய்யும் பஜனையில் விருப்பம் கொள்பவனே வருக; பழனியிலும் எழுந்தருளி உயிர்க்குலத்தின் தங்குமிடமாக உள்ளவனே வருக; மலைகள் தோறும் எழுந்தருளியுள்ள இறைவனே வருக; தந்தருள உனது திருக்கைகளில் திருநீற்றுடன் விரைந்து வருக; கார்மேகம் படியும் குன்றக்குடி மயில்மலையில் எழுந்தருளியுள்ளவனே வருக; பெருமை பொருந்த ஞான ஒளிவீசும் வேலுடன் வீடுபேறு அருளக் கந்தனே வருக;

விளக்கம்: சீவன்முத்தர் இவ்வுலகில் வாழ்ந்தாலும்கூட. உலகப்பற்று அவர்பால் இல்லை என்பதை விளக்கும் அரிய உவமை புளியம் பழமும் தோடும். விளைந்து முற்றிய புளியம்பழம் சீவன்முத்தருக்கும், அது தோட்டினுள் இருப்பது அவர் உலகில் இருப்பதற்கும், பழம் தோட்டினைப்பற்றாமல்

இருப்பது இம்முத்தரின் உலகப்பற்ற நிலைமைக்கும் வந்த உவமைப் பொருத்தங்கள். ஆட்டுக்கிடா, வெள்ளையானை, மயில் ஆகிய மூன்றும் பெருமான் ஊர்திகள். இவற்றுள் இங்குத் தகர் குறித்தார். பெருமானின் ஊர்தி தகரும் என்பதைக் கந்தபுராணத்துத் "தகரேறு படலத்"திற் காண்க. மக்களைத் தம்பால் ஏற்றிக்கொள்ள ஆயத்தமாக மரக்கலம் நிற்கும் கப்பல்துறை போல அருள்புரிய ஐயன் நிற்பதால் "துறையே" என்றார். வெண்ணீற்றின் சிறப்பை "நீக்கரிதாம் இருவினையும் நீறுபடப் பன்னீரின் ஆக்கமிகும் பச்சிலையில் அமைத்த வெண்ணீறு" என்று குன்றக்குடிக் கலம்பகம் கூறும். மேலும் திருநீற்றுடன் பன்னீர் முதலிய நறுமணங் கூட்டுதல் கூடாது என்பதையும் குன்றக்குடிக்கலம்பம் "திகழ்வடிவேல் கொற்றவன் மருவிய குன்றக்குடியில் உற்றவர் கரத்தால் உதவும் நற்றவப் பயன்நோய் நனையா நீறே" என்பது உணர்த்தும். பன்னீரிலையைப் பெருமானது திருக்கரமாகக் கொள்வது மரபு. பெருமானே தம் திருக்கரத்தல் வழங்குவதால் இங்குப் பன்னீரிலை கூறினாரில்லை என்க.

"சமணரை அழிபரை மகனே" என்றதற்கும் 3ஆம் பாடல் விளக்க உரையிற் கூறியது கண்டு கொள்க.

இலக்கணக்குறிப்பு: வெண்ணீறொடு என்பது வெணீறொடு என்று இடைக்குறையானது.

6. புகையொழி வுறுகனல் ஒளியே வருக
பொதுவினில் நடமிடு வெளியே வருக
புனமிசை செலும்ஒரு முனியே வருக
புனைவளை விலைசெயும் கனியே வருக

நகைமுக மொடுமொழி புகல்வாய் வருக
நதியுத விடுசிறு மதலாய் வருக
நமன்வரு வழியடை படவே வருக
நலமுயர் கதியது தரவே வருக
பகைவரை வெருவிடு பவனே வருக
பரங்கிரி அமர்வறு தவனே வருக
பலதுய ரதுபொடி படவே வருக
பரவெளி தனில்எனை விடவே வருக
ககனம தனின்நிரை நிலையே வருக
கருமுகில் படிசிகி மலையாய் வருக
கனமுடன் ஒளிரிடு கதிர்வே லுடனே
கந்தா வருகக் கதியது தரவே.

குறிப்புரை: ஒளி=செவ்வொளி. பொது = அனைத்துயிர்க்கும் பொதுவான. வெளி=வானவெளி. புனம்=தினைக்கொல்லை. வளை=வளையல். விலை=வில்+ஐ=ஒளியினை. கதி= அடைக்கலம். பரவெளி=பரமாகாயம்=வீடுபேறு. ககனம்= ஆகாயம். நிரை=முறைமை.

பொழிப்புரை: புகையொழிந்த மிக்க கனலின் செவ்வொளியே வருக; அனைத்துயிர்க்கும் பொதுவில் நடனமாடும் வானவெளியனே வருக. வள்ளிநாச்சியார் பொருட்டுத் தினைக் கொல்லைக்குச் செல்லும் ஒப்பற்ற முனிவரே வருக; முன்கையில் அணிந்த வளையல் ஒளிவிடும் இனியனே வருக; புன்முறுவலுடன் இன்சொல் கூறுகின்றவனே வருக; கங்கை உதவிய இளமகனே வருக; எமன்வரும் வழி – இறப்பு அடைபட வருக; நலமுயர்ந்த அடைக்கலம் தரவருக;

பகைவரை அஞ்சச் செய்பவனே வருக; திருப்பரங்குன்றிலும் எழுந்தருளிய தவத்தோனே வருக; ஆகாயத்தில் முறைப்படி எங்கும் நிலைத்தவனே வருக; கார்மேகம் படியும் குன்றக்குடி மயில் மலையில் எழுந்தருளியவனே வருக; பெருமை பொருந்த ஞான ஒளிவீசும் வேலுடன் வீடுபேறு அருளக் கந்தனே வருக.

விளக்கம்: முருகன், "சேயோன்" ஆதலின் புகையில்லா மிக்க கனலின் செவ்வொளியன் எனப் பெற்றான். புனமிசை வள்ளிநாச்சியார் பொருட்டுச் சென்றவனாயினும் அதில் காமநோக்கின்மையின் ஒப்பற்ற முனியே என்றும், பரங்கிரியில் தெய்வயானையம்மையை மணந்த போதும் அந்நோக்கின்மையின் தவனே என்றும் விளிக்கப்பெற்றான். பெருமான் மட்டுமின்றிப் பெருமாட்டியரும் இத்தகையரே என்பதைப் "பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாகும்" என்ற சித்தியாரால் அறியலாம். "முதிரா இளமுலைப் பாவையுடன் இருந்த பரமயோகி" என்று திரு. 11.இல் பட்டினத்தாரும் இதனை வழிமொழிகிறார். "கார்மாமிசை காலன்வரின்கலபத் தேர்மாமிசை வந்து எதிரப்படுவாய்" என்று அருணகிரி அழைப்பதுபோல் இவரும் "நமன்வரு வழியடைபடவே வருக" என்று அழைக்கிறார். இவர் கூறும் "பரவெளி" பற்றி, "பரநாத வெளியில் துவாத சாந்த வீடு" என்பார் ஸ்ரீகுமர குரபர அடிகள்.

இலக்கணக்குறிப்பு: வில்+ஐ=வில்லை என்று இரட்டிக்க வேண்டுவது விலை என்று இடைக்குறையாய் நின்றது.

7. சங்கொலி மிகுசல நிதியாய் வருக
சஞ்சல மதுதவிர் மதியாய் வருக
தண்பர விடும்அரி மலையாய் வருக
சந்ததம் எனதுஎதிர் நிலையாய் வருக
புங்கவர் அடிதொழ விரைவாய் வருக
புந்தியில் உனதருள் நிறைவாய் வருக
புன்தொழில் எனைவிட எதிரே வருக
பொன்கலன் அதிலுறு கதிரே வருக
மங்கல முரசொடு மயில்மேல் வருக
வஞ்சியர் அழகொடும் இருபால் வருக
வந்திடும் அடியவ ருடனே வருக
வஞ்சனை யறநட முடனே வருக
கங்குலை விலகிடு கலையாய் வருக
கருமுகில் படிசிகி மலையாய் வருக
கனமுடன் ஒளிரிடு கதிர்வே லுடனே
கந்தா வருகக் கதியது தரவே.

குறிப்புரை: சங்கு=சங்குவளையல். சலநிதி=கடவுள். மதி=ஞானம். அரி=சிவன். புங்கவர்=மேலோர். வஞ்சியர்= வள்ளி தெய்வானையர். கங்குல்=இருள்–ஆணவ இருள்.

பொழிப்புரை: முன்கையில் சங்குவளையல்கள் ஒலிக்க அணிந்த கடவுளே வருக; உயிர்க்குலச் சஞ்சலம் தீர்க்கும் ஞானவடிவனே வருக; குளிர்ச்சி பரவும் சிவன் மலையில் எழுந்தருளியுள்ளவனே வருக; நாடோறும் என் எதிரே நிலையாக வருக; மேலோர் உனது திருவடிதொழ விரைந்து வருக; எம் அறிவில் உன் திருவருள் நிறைவாய் அமைய வருக. அற்பத் தொழில்களை நான் முற்றாகக் கைவிட வருக; பொற்கலத்தில்

ஒளிரும் ஒளியாகவும் விளங்குகின்றவனே வருக; மங்கல முரசு ஒலிக்க மயிலேறி வருக; வள்ளி தெய்வானையர் இருபால் அமர்ந்த அழகு மிளிர வருக; உன்னை வணங்க வந்த அடியார் சூழவருக; உலகில் வஞ்சனை ஒழிய நடனமாடி வருக; இருள் ஆகிய ஆணவத்தின் ஆற்றலை விலக்கும் ஞானியே வருக; கார்மேகம்படியும் குன்றக்குடி மயில்மலையில் எழுந்தருளியுள்ளவனே வருக; பெருமை பொருந்த ஞான ஒளிவீசும் வேலுடன் வீடுபேறு அருளக்கந்தனே வருக.

விளக்கம்: கேவல நிலையில் உயிரின் அறிவை முற்றாக மறைத்தும், சகல நிலையில் கீழ்ப்படுத்தியும் விளங்கும் ஆணவத்தை அழிக்க இயலாது. அது அநாதி–என்றும் உள்பொருள்; உயிரைப் பிரியாதது. "ஆணவத்தோடு அத்துவிதம் ஆனபடி மெய்ஞ்ஞானத் தாணுவினோடு அத்துவிதம் ஆகும்நாள் எந்நாளோ" – என்பது தாயுமானவர் வாக்கு. உயிரின் முத்திநிலையிலும் கூட ஆணவம் அழியாத தாயினும் அதன் இருவகை ஆற்றலும் முற்றாகக் கெட, அது வலியிழந்து உயிர்க்கு இறைவழங்கும் இன்பத்தை மேன்மேலும் விளைவிக்கும். இதனை "மெத்தவே இன்பம் கொடுத்தல் இறை, இத்தைவிளை வித்தல் மலம்" – என்பது உண்மை விளக்கம். இவ்வகையிலான ஆணவம் அழிவதில்லை; அதன் இருவகை ஆற்றலையும் அதனின்று விலக்குகின்றவன் பெருமான் என்பதைக் "கங்குலை விலக்கு கலையாய்" என்றார்.

இலக்கணக்குறிப்பு: சங்கு என்ற முதற்பொருள் அதனின் ஆன சினைக்கு ஆனமையின் சங்கு முதலாகுபெயர்.

8. பரிபுரம் அதின்ஒலி எழவே வருக
பனிருக ரமதொடு தொழவே வருக
பலசம யமதனின் உருவே வருக
பகரரு மறைபுகழ் அருவே வருக
திரிபுரம் எரிசிவன் அருளே வருக
செகமதை உதவிடு பொருளே வருக
தினம்என தெதிர்அழ குடனே வருக
சிரமதின் நடமிடு நடனே வருக
குரிஇது வெனவழி சொலவே வருக
கொடுமனம் அதுநிலை படவே வருக
கொலுவினில் அமர்வுற நலமே வருக
குயிலியை மணமது தரவே வருக
கரிபரி நிரைவுறு பதியாய் வருக
கருமுகில் படிசிகி மலையாய் வருக
கனமுடன் ஒளிரிடு கதிர்வே லுடனே
கந்தா வருகக் கதியது தரவே

குறிப்புரை: பரிபுரம் = சிலம்பு. உரு=அழகு. சிரம்=துவாத சாந்தத் தலம். நடம்=கூத்து. குறி=அடைய வேண்டிய இலக்கு. வழி=அடையும்விழி. கொடுமனம்=அலைபாயும் கொடிய இயல்புடைய மனம். கொலு=திருவோலக்கம். குயிலி=வள்ளி நாச்சியார். நிரை=ஆநிரை.

பொழிப்புரை: சிலம்பு ஒலிக்க நடந்து வருக; நாங்கள் வணங்க உனது பன்னிருதிருக்கரங்களுடன் வருக; பல்வேறு சமயங்களும் போற்றும் அழகனே வருக; மறைகள் சொல்லுதற்கரிய புகழுடைய அருவனே வருக; முப்புங்களையும் எரித்த சிவபெருமானின் அருள் உருவனே

வருக; உலகை உதவிய உறுதிப்பொருளே வருக; நாடோறும் என் எதிரே அழகுடன் வருக; அடியவரின் துவாத சாந்தத் தலத்தில் நடனமாடும் நடனனே வருக; உயிர்கள் அடைய வேண்டிய இலக்கு ஆகிய உன் திருவடியையும் அதனை அடையும் வழியையும் எமக்குக் கூற வருக; உலகத்துக் கொடிய மனங்கள் நன்னிலைப்பட வருக; எமது உள்ளமாகிய திருவோலக்கத்தில் எழுந்தருள நலமானவனே வருக, குயில் ஆகிய வள்ளிநாச்சியாருக்கு-உன் மனைவி என்ற நன்னிலை அருள வருக; யானை குதிரை ஆநிரை ஆகியன உள்ள பதியனே வருக; கார்மேகம் படியும் குன்றக்குடி மயில்மலையில் எழுந்தருளியுள்ளவனே வருக; பெருமை பொருந்த ஞான ஒளிவீசும் வேலுடன் வீடுபேறு அருளக்கந்தனே வருக.

விளக்கம்: இவன் சிவபெருமானேயாதலின் "அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வர் பொருளாய்" என்ற சித்தியார்ப் பகுதியை உளங்கொண்டு "பலசமயமதனின் உருவே" என்று விளித்தார். மறைகளும் காணமாட்டா மாண்பனிவன் ஆதலின் "பகரரு மறைபுகழ் அருவே" என்றார். சிவன் முப்புரம் எரிசெய எழுந்தது சினங் கொண்டாதலால், இவனும் அத்தகு சினத்தனோ என்று ஐயுறவேண்டா என்பது உணர்த்தச் "சிவன் அருளே" என்றார். "காண்பார் ஆர் கண்ணுதலார் காட்டாக்காலே" என்பதும் அவனருளாலேதான்" அவன்தாள் வணங்கும்பேறு வாய்க்கும் என்பதையும் உளங்கொண்டு, "குறிஇதுஎன வழிசொலவே வருக" என்று அழைத்தார். நினைப்பவர் மனமெலாம் கோயிலாதலின் அத்தகு மனத்தைக் "கொலு" என்றார்.

இலக்கணக்குறிப்பு: பனிருகரம்–இடைக்குறை. கரிபரிநிரை – எண்ணும்மைத் தொகைகள். குறி, குரி என்று நின்றது எதுகை நோக்கிய செய்யுள் விகாரம்.

9. வளமுடன் அறுபடை வளர்வோய் வருக
மதிரவி எனும்இரு கலையாய் வருக
வளியது தரிபடு மனையே வருக
மனையினில் இலகிய அனையே வருக
புளகிதம் எழஇது ததியே வருக
பொதுவினில் நடமிடு நிதியே வருக
புகலரும் ஒருமுனை நிலையே வருக
புகும்ஒரு சுழிமுனை கலையே வருக
அளவிட மிகஅரி துரியா வருக
அருமறை படும்ஒரு பெரியாய் வருக
அவன்உரு மரகத வடிவே வருக
அதில்உறு மதுநிறை குடமே வருக
களவம்அ தில்அதி விரைவாய் வருக
கருமுகில் படிசிகி மலையாய் வருக
கனமுடன் ஒளிரிடு கதிர்வே லுடனே
கந்தா வருகக் கதியது தரவே

குறிப்புரை: அறுபடை = ஆறுபடைவீடு. மதி ரவி = வெண் திங்கள், செஞ்ஞாயிறு. கலை = ஒளி. வளி = சுவாசக் காற்று. தரிபடுமனை = கட்டுப்படுத்தப்படும் இடம். அனை=அன்னை. புளகிதம் = மிக்கமகிழ்ச்சி. ததி = தக்கசமயம். நிதி = செல்வம். முனை=மூலாதாரம். கலை=ஒளி. துரியா=கடவுளே. படு =

கூறப்படும். அவன் உரு=அம்மையப்பனாகிய சிவனது வடிவில் உள்ள. மரகத வடிவே = அம்மையே. மது = அமுதம். களவம் = யானை.

பொழிப்புரை: ஆறுபடை வீடுகளிலும் அருள் வளத்துடன் எழுந்தருளியுள்ளவனே வருக; உயிர்க்குல நல்வாழ்விற்கு உதவும் வெண்டிங்கள், செஞ்ஞாயிறு ஆகியவற்றின் ஒளியாய் விளங்குகின்றவனே வருக; வாசி எனும் சுவாசக் காற்று கட்டுப்படுத்தப்படும் இடமாக விளங்குகின்றவனே வருக; அந்த இடத்தில் விளங்கும் அன்னையே வருக; உள்ளத்தில் மகிழ்ச்சி மிக இத்தருணம் இச்சமயம் வருக; பொதுவில் நடமிடுகின்ற செல்வமே வருக; சொல்லுதற்கு அரிய ஒப்பற்ற மூலாதாரமாக விளங்குகின்றவனே வருக; சுழிமுனை நாடியாக விளங்குகின்றவனே வருக; அளவிட்டுக் கூறுவதற்கு மிகவும் அரிய கடவுளே வருக, அரிய மறைகளில் கூறப்படும் ஒப்பற்ற பெரியவனே வருக. அம்மையப்பனாகிய சிவபெருமானது வடிவில் இடப்பாகம் கொண்டு அருள் புரிவதில் முற்பட்டு விளங்கும் மரகத வடிவு கொண்ட அம்மையாயுள்ளவனே வருக; அத்திருவடிவாகிய குடத்தில் நிறைந்த அமுதமே வருக; உனது யானை ஊர்தியில் ஏறி அருள்புரிய விரைந்து வருக; கார்மேகம் படியும் குன்றக்குடி மயில் மலையில் எழுந்தருளியுள்ளவனே வருக, பெருமைபொருந்த ஞான ஒளிவீசும் வேலுடன் வீடுபேறு அருளக்கந்தனே வருக.

விளக்கம்: "எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற சிவமே" என்ற வடலூர் வள்ளற் பெருமான் வாக்கினை "பொதுவினில் நடமிடு நிதியே" என்பதில் காணலாம். "பேசரிய

உயிரையெலாம் பெற்றுநோக்கிப் பெரும்போகம் அவையளித்துப் பிறப்பினையும் ஒழித்திட்டு ஆசகலும் அடியருளத்து அப்பனுடன் இருக்கும் அன்னை" என்று அம்மை உயிர்க்குலத்துக்கு முற்பட்டுச் செய்யும் அருளிப்பாடுகளைச் சித்தியார் கூறுதலாலும், "நம் கையினால் நாம் அனைத்தும் செய்தாற்போல் நாடனைத்தும் நங்கையினால் செய்தளிக்கும் நாயகனும்" என்று திருக்களிற்றுப்படியார் சுருங்கக் கூறுதலாலும், "ஆதலின் நமது சத்தி அறுமுகன்" என்று சிவபெருமான் கூறுவதாகக் கந்தபுராணம் சொல்வதாலும், "அறுமுகனை" அவன் உருமரகதவடிவே" என்று கூறுகிறார். முருகப்பெருமானுக்கு உரிய ஊர்திகளுள் யானையும் ஒன்றாதலின் "களவமதில் அதிவிரைவாய் வருக" என்றார். முருகனுக்குக் களிறு ஊர்தி என்பதை "கால் கிளர்ந்தன்ன வேழம் மேல்கொண்டு" என்ற திருமுருகாற்றுப் படை, "படுமணியானை நெடியோய்" (பரி.19:28) என்ற நப்பண்ணனார் பாட்டாலும் அறியலாம்.

இலக்கணக் குறிப்பு: மதிரவி–உம்மைத் தொகைகள். அனை–அன்னை என்பதன் இடைக்குறை.

10. கொடுவிடம் அதைநிக ரிடுமொழி மடவார்
குலவிட அவரின் அதரம துபருகி
குவிதனம் அதுகரம் அதுகொடு நெருடிக்
குயிலென மயிலென அவரடி வருடிப்
படுவரவு அதைநிக ரிடுபகம் அதுவே
பதம்என அனுதினம் அதுகெதி எனவே
படுவலை உறுகலை நிகரென அடியேன்
படுகுழி அதனின் முழுகிடாது அருளித்

திடமுள வழிஇது எனவரம் உதவிச்
சிரகிரி தனில்உரு குடிலையில் மருவிச்
சிறுமயில் எனும்ஒரு மனைவியின் அதரத்
தினில்உறும் அமுதினை இனிவொடு பருகிக்
கடமது நிலைபெற அருளது புரியக்
கருமுகில் படிசிகி மலையாய் வருக
கனமுடன் ஒளிரிடு கதிர்வே லுடனே
கந்தா வருகக் கதியது தரவே.

குறிப்புரை: நிகரிடு=ஒத்த. அதரமது = இதழ்கள். நெருடி=மென்மையாகத் திருகி. வருடி=தடவி. படுவரவு=தோன்றும் இன்பம். பகம்=பெண்குறி. பதம்=பெரிய இன்பம். வரம்=மேன்மை. உருகுடிலை=அழகிய ஓங்காரம். சிறுமயில்=இளமயில். கடம்=நீதி.

பொழிப்புரை: கொடிய விடம்ஒத்த விலைமகளிர் குலவ, அவரது இதழ்தரு கள் பருகியும். அவர்களது குவிந்த மார்புகளைத் தமது கையால் மென்மையாகத் திருகியும். குயில் என்றும் மயில் என்றும் அவர்களைப் புகழ்ந்து அடிகளைத்தடவி அதனால் தோன்றும் இன்பத்தை ஒப்பப் பெண்குறியில் இடும் அதுவே பேரின்பம் என்று கொண்டு நாடோறும் அதுவே பரமகதி என்று எண்ணி, வலையில் அகப்பட்ட கலைமான்போல நான் மீள்தற்கு இயலாத அப்படுகுழியில் மூழ்கிடாமல் இருக்க அருள்புரிந்து, உயிர்க்கு உறுதி சேர்க்கும்வழி இது என்று மேலானவழி நடக்க அருளி, சிரகிரியில் அழகிய பிரணவத்தில் பொருந்தியவனே, இளமயில் ஒத்த என் ஒப்பற்ற மனைவியின் இதழ் அமுதம் பருகி நீதி நிலைபெற அருள்புரியும் பொருட்டுக் கார்மேகம்

படியும் குன்றக்குடி மயில் மலையில் எழுந்தருளியுள்ளவனே வருக. பெருமைபொருந்த ஞான ஒளிவீசும் வேலுடன் வீடுபேறு அருளக் கந்தனே வருக.

விளக்கம்: விலைமாதர் தருவதை "அதரமது" என்னும், குலமாதர் தருவதை "அதர அமுது" என்றும் குறித்த நயம் ஓர்க. வலையிடைப் பட்ட மான் அதனின்று வெளியேற நினைத்து முயலுந்தோறும் அவ்வலை, அம்மானை இறுக்கி வெளியேற விடாது தன்பால் செறித்தல் என்ற உவமை மூலம் விலைமாதர் செயலைப் புலப்படுத்துகிறார்.

இலக்கணக்குறிப்பு: வலை உறுகலை – வினைத்தொகை

எட்டுருத் தெய்வமும் நீயே
எட்டுக்(கு) அதீதமும் ஆயே
தட்டுப்ப டாதஅ தீத
சாமியும் நீஎன ஓர்வார்
முட்டுப்ப டாமல்வந்(து) என்றும்
முற்றுச் செயும் அருட்பொன்னைக்
கொட்டிக் கொடுத்திடும் கோவே
குன்றக் குடியுறை தேவே

— குன்றக்குடிப் பதிகம்
அருள்திரு பாம்பன் சுவாமிகள்

உ

குன்றக்குடி
அருள்தரு சண்முகநாதப் பெருமான்மீது
மதுரகவி ஆண்டவரின்

மயூரகிரி முருகர் அநுபூதி

காப்புவெண்பா

செந்தூர் வளர்குமரன் சீரதநு பூதியதாய்ச்
சந்தமுற வேஅடியேன் சாற்றவே – தந்திமுகச்
சிற்பரமாய் வல்வினையின் தீகற்றி ஆண்டருளும்
கற்பகவி நாயகனே காப்பு.

குறிப்புரை: சீரது=சிறப்பினை. அநுபூதியதாய் = நினைவுக்கு அயலாகி வேறாகி விரிகின்ற உள்ளுணர்வை. சந்தமுற=அழகுற. தந்தி முக = ஆண் யானைமுகத்து. சிற்பரம் = கடவுள்.

பொழிப்புரை: குன்றக்குடியில் மட்டுமின்றித் திருச்செந்தூரிலும் எழுந்தருளியுள்ள அருள்தரு சண்முகநாதப்பெருமானின் சிறப்பினை, நினைவுக்கு அயலாகியும் வேறாகியும் விரிகின்ற உள்ளுணர்வால் அடியேன் அழகுறக்கூறுதற்கு; ஆண் யானை முகமுடைய கடவுளாய், கொடிய வினையின் தீங்குகளை எல்லாம் போக்கி நம்மை ஆண்டருள்கின்ற கற்பகவிநாயகப் பெருமானே காப்பாவார்.

விளக்கம்: "குன்றக்குடியான்", கனவில் இட்ட அருளாணையின் வண்ணம், அவன்மீது இயற்றப்பெற்ற

தாதலின் "மயூரகிரி முருகர் அநுபூதி"யாயிற்று. எனவே "செந்தூர் வளர் குமரன்" என்ற தொடருக்குக் "திருச்செந்தூரிலும் எழுந்தருளியுள்ள அருள்தரு சண்முகநாதப் பெருமான்" என்று பொருள் கொள்ளப்பெற்றது. ஆளுதலாவது அடிமை கொள்ளுதல். அருளுதலாவது அருள்புரிதல். குன்றக்குடிக் குன்றேறும் தலையிடத்தில் வீற்றிருக்கும் அருள்தரு தோகையடிவிநாயகர், "குன்றைப் போற்றுவர்க்குச் சித்திக்கும் தோகையடி விநாயக தேசிகனே" என்று போற்றப்பெறும் வல்லமையுடைய வராதலின் "வேண்டுவார் வேண்டுவதே வழங்கும்" அப்பெருமானைக் "கற்பக விநாயகர்" என்று போற்றுகிறார். வல்வினையின் தீதாவது "இருவினைப் பயனாக வரும் அனுபவங்களும் பிறவியுமாம்".

1. திருவே அருவே செறுவே உருவே
மருவே மலரே மணமே மதுவே
தருவே நிழலே தனமே கனமே
குருவே குணமே குமரா சலனே.

குறிப்புரை: திருவே = விரும்பும் தன்மையனே. செறு = அடக்குதல். மரு = மலை. மது = அமுதம். கனம் = நிறைவு. குமராசலனே = குமரமலையிலும் எழுந்தருளியுள்ளவனே.

பொழிப்புரை: அனைவரும் விரும்பும் தன்மையனே, அருவமானவனே, அனைத்தையும் தன்னுள் அடக்கியவனே; திருவுருத் தாங்கியவனே; மலையாக, மலராக, மணமாக, அமுதமாக, கற்பகமரமாக, அதன் நிழலாக, செல்வமாக, குறைவிலா நிறைவாக, சற்குருவாக, குணக்குன்றாக

விளங்கிக் குமரமலையிலும் எழுந்தருளியுள்ளவனே அருள்க.

விளக்கம்: "விண்ணொடு மண்ணை விழுங்கி அருட்கதிர் விரியும் இளஞ்சுடரே" – முத்துக்குமாரசுவாமிபிள்ளை .... தால் 8 என்றும்; "தன் அருள் வெளிக்குளே அகிலாண்ட கோடி எல்லாம் தங்கும்படிக்கு இச்சை வைத்து உயிர்க்கு உயிராய்த் தழைத்தது" தாயுமானவர், திருவருள் விலாசப் பரசிவவணக்கம் 1: 1-2. என்றும்; "எங்கும் எவையும் எரியுறு நீர்போல் தங்கும் அவன் தானே தனி" - திருவருட் பயன்-8. என்றும் வருவன, முருகனின் செறிவான தன்மையை வலியுறுத்தும்.

2. மதியே ரவியே மயிலே அயிலே
பதியே புவியே பணியே அணியே
நிதியே பொருளே நிறைவே உறவே
விதியே செயலே விமலா பரனே.

குறிப்புரை: அயில் = வேல். பதி = கடவுள். பணி = அணிகலன். அணி = அழகு. பொருள் = தலைமை. விதி = விதிப் பவன். செயல்- காவல். விமலா = தூயவனே.

பொழிப்புரை: வெண்ணிலவாக, செஞ்ஞாயிறாக, மயிலாக, வேலாக, கடவுளாக, பூவுலகாக, அணிகலனாக, அழகாக, செல்வமாக, தலைமையாக, நிறைவாக, உறவாக, விதிப்பவனாக, காவலாக, தூயவனாக உள்ள மேலானவற்றுக்கெல்லாம் மேலானவனே அருள்க.

விளக்கம்: முன் செய்யுளிற் கூறப்பெற்றனவாக மட்டுமன்றி, இதில் கூறப்பெற்றனவாகவும் பெருமான் இலங்கும் பெற்றியை, "எவ்வுயிரும் தானேயாய் நின்றளிப்பான்" என்று திருக்கயிலாய ஞானஉலா குறிப்பிடும்.

3. மறையே தனியே வரையே திரையே
இறையே கனியே இனமே மனமே
பொறையே புகழே புணையே நினைவே
துறையே உனையே தொழுதேன் அருளே.

குறிப்புரை: மறை=அடைக்கலம். தனி=ஒப்பற்றது. வரை = மலை. திரை=கடல். இறை=தங்குதல். மனம்=விருப்பம். புணை=தெப்பம். நினை=நோக்கம். துறை=தங்குமிடம்.

பொழிப்புரை: அடைக்கலம் தரும்பொருளாக, ஒப்பற்றதாக, மலையாக, கடலாக, எவ்விடத்தும் தங்கியிருப்பதாக, கனியாக, உயிர்க்கு இன்மாக. விருப்பம் கொண்டவனாக, உயிரின் மனமாக, பொறையனாக. புகழாக. தெப்பமாக, நோக்கமாக, உயிர்களின் நிலையான தங்குமிடமாக உள்ள உன்னை நான் தொழுதேன் அருள்க.

விளக்கம்: "அனைத்தும் நீ அனைத்தின் உட்பொருளும் நீ" என்ற பரிபாடல் தொடர் முன்னவற்றுக்கும் இதற்கும் பொருந்தும். இவன் அடைக்கலம் தரும் பொருளாய் விளங்கிக் காப்பவன் என்பதை "அடைந்தார்தம் பாவங்கள் அல்லல் நோய்கள் அருவினைகள் நல்குரவு செல்லாவண்ணம் கடிந்தானை" (திருமுறை 6: திருப்பள்ளி....5.1) என்பது கூறும். "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்"

என்ற திருக்குறள் இவன் புணையாய் விளங்குவதுணர்த்தும். "ஒன்றே தன்மை உனக்கும் மற்று எமக்கும்; அன்றென மொழியினும் ஆம் எனப்படுமே" என்று தொடங்கி; அநாதி, அழிவின்மை, வியாபகம், அறிவு, இச்சை ஞானம் கிரியை ஆகிய முச்சக்திகள் உடைமை ஆகியவற்றால் உயிர்க்குலத்துக்கு இறைவன் "இனமாய்" உள்ளமை விளக்குவார் ஸ்ரீகுமரகுருபர அடிகள்-(பண்டா....8:1-10). "இறைவன் புகழே பொருளேசேர் புகழ்" ஆதலின் "புகழே" என்றார்.

4. மண்ணே மரமே வளரும் கிளையே
விண்ணே புனலே வெளியே ஒளியே
பெண்ணே அலியே பிறஆண் உருவே
கண்ணே எனைஆள் கருணா கரனே.

குறிப்புரை: வெளி = விண்வெளி.

பொழிப்புரை: நிலவுலகம், மரம், உயிர்ப்புடைய கிளை, விண், நீர், விண்வெளி, ஒளி, பெண்ணுரு, அலியுரு, ஆணுரு, கண் என்று எல்லா மாகி என்னை ஆளும் கருணையின் உறைவிட மானவனே அருள்க.

விளக்கம்: உரு என்பதனைப் பெண் அலி ஆண் என்ற மூன்றுக்கும் கூட்டுக.

5. சிந்தா குலமா னவைதீர்த் திடவே
வந்தாள் முருகா வடிவே வொடுநீ
எந்தாய் மறைதே டும்இளங் கிளியே
கந்தா குமரா கதிர்வே லவனே.

குறிப்புரை: சிந்தாகுலம்=சிந்தை+ஆகுலம்=மனத்துயர். எந்தாய் = எம்+தாயே. எந்தாய்=எம்+தந்தையே. ஆள்=என்னை நெறிப்படுத்து.

பொழிப்புரை: எம் தாயே/எம் தந்தையே, மறைகள் இன்னும் தேடும் இளம்கிளி ஒத்தவனே, கந்தா, குமரா, ஒளிரும் வேலேந்தியவனே/முருகா, கூர்மையான உன் வேலொடு, எனது மனத்துயர்கள் எல்லாம் தீர்க்கும் பொருட்டு வந்து என்னை நெறிப்படுத்தியருள்க.

விளக்கம்: "முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னே போல் போற்றுதல்" என்ற இலக்கணம் இவர்க்கும் ஒத்ததாதலின் அருணகிரியாரின் கந்தரனுபூதி பா.46இல் வரும் "சிந்தா குலமானவை தீர்த்து", "கந்தா கதிர்வேலவனே" என்பன அங்ஙனமே இங்கும் அமைந்துள்ளமை காண்க. சிந்தாகுலம் தீர்ப்பது ஞானமேயாதலின் "வடிவேலொடு நீ வந்து ஆள்" என்றார். "பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய பாமேவு தெய்வப் பழமறையும்... காணாத போதமாய்" என்ற கந்தர் கலிவெண்பாவை உள்ளடக்கியது, "மறைதேடும் இளங்கிளியே" என்பது. "எந்தாய்" என்ற சொல்லாட்சி எம்தாயே என்றும், எம் தந்தையே என்பதன் மரூஉ மொழியாக நின்றும் பொருள் தருவது. இதனை ஸ்ரீகுமரகுருபர அடிகளின் பா.554இல் காணலாம்.

இலக்கணக்குறிப்பு: எந்தாய் என்பது எம் தாயே என்று பொருள் தரும்நிலையில் தொடர்மொழி, எம் தந்தையே என்று பொருள்தரும் நிலையில் மரூஉமொழி.

6. பிரமன் தனைமெய்ப் பொருள்ஓ துகெனத்
தரம்அன்(று) எனவே தளைசெய் தவனே
அரமன்(று) இது(வ)என்(று) அரனும் புகலச்
சிரமின்(று) எடுஎனச் செயும்வே லவனே.

குறிப்புரை: மெய்ப்பொருள் = ஓங்காரப்பொருள். தரமன்று = மெய்ப்பொருள் சொல்லத் தெரியாமை படைத்தலுக்குரிய தரமன்று. தளை=சிறை. சிரமன்று=உயர்வல்ல. எடு=சிறைவீடு செய்க. செயும்=சிறைவீடு செய்யும்.

பொழிப்புரை:நான்முகனை நோக்கி, "ஓங்காரப்பொருள் கூறுக"
என்று ஆணையிட, அஃதறியாது விழித்ததனால் நீ படைப்புத் தொழில் புரியத் தகுதியில்லாதவன் என்று குட்டிச் சிறையிட்டவனே; "அவனைச் சிறையிலிட்டது அறமன்று" என்று சிவபெருமான் கூறி, "உன்செயல் உயர் செயலாகாது நான்முகனைச் சிறையிலிருந்து விடுதலை செய்க" என்று சொல்ல அங்ஙனமே செய்த வேலவனே அருள்க.

விளக்கம்: "ஓம் எனப்படும் மொழிப்பொருள் இயம்புக", "மிகைத்த கண்களை விழித்தனன் வெள்கினன் விக்கித் திகைத்து இருந்தனன் கண்டிலன் அப்பொருள் திறனே", "செவ்வேள் குட்டினான் அயன் நான்குமா முடிகளும் குலுங்க;" "நிகளச் சிறை புரிந்து இடுவித்தனன் கந்தமாம் சிலம்பில்"; "மைந்தநின் செய்கை என்னே மலரயன் சிறைவிடு"; "கமலத்து அண்ணல் ஒன்கரம் பற்றிச் செவ்வேள் அத்தன்முன் விடுத்தலோடும்" என்ற கந்தபுராணத் தொடர்கள் இச்செய்யுட் பொருளை விரித்துரைப்பன.

இலக்கணக்குறிப்பு: "அறமன்று" எனற்பாலது எதுகை நோக்கிய செய்யுள் விகாரமாய் "அரமன்று" என்று வந்தது.

7. ஐந்(து)ஆ றுடன்ஒன்(று) அறுமா முகனே
மைந்தா உமையாள் மகிழும் தவமே
பைந்தார் அணியும் பகவன் மருகா
நைந்(து)ஆ குலமா கினன்நா யகனே.

குறிப்புரை: ஐந்து = திருவைந்தெழுத்து. ஆறு= திருஆறெழுத்து. முறையே நமசிவய, சரவணபவ என்பன. மைந்தா=வீரனே. பைந்தார்=பசிய துளசிமாலை. பகவன்=திருமால். நைந்து=மனம் நைந்து.

பொழிப்புரை: சிவபெருமானாகத் திருவைந்தெழுத்திலும், முருகனாகத் திருஆறெழுத்திலும் பொருந்திய ஆறு திருமுகத்தனே; வீரனே; உமையம்மை மகிழ்தற்குக் காரணமான தவமே, பசிய துளசிமாலை அணிந்த திருமாலுக்கு மருமகனே; நான் மனம் நைந்து துயருற்றேன். என் நாயகனே அருள்க.

விளக்கம்: "நமசிவாய" என்ற திருவைந்தெழுது சிவபெருமான் திருப்பெயரும் திருமந்திரமும் ஆகும். அதுபோலவே "சரவணபவ" என்ற திருவாறெழுது முருகன் திருப்பெயரும் திருமந்திரமும் ஆகும் என்பதைத் திருமுறைகளும், ஸ்ரீ பாம்பன் சுவாமிகளின் திருப்பாடல்களும் உணர்த்தும். "சிவயநம என....அநுதினம் உனைஓதும்" குமரகுருபர என்று தொடங்கும்..."குருமலைத் (சுவாமி மலை) திருப்புகழ் என்று அருணகிரியார் முருகனைத் திருவைந்தெழுத்துக்

குரியவனாக ஓதுவதும்," பஞ்சாட்சரத்தால் பரமன் உருவதாய்த் தஞ்சம் என்றோரைத் தழைத்திடச் செய்து" (தேவராய அடிகளின் திருவேரகம்-கந்தர் சஷ்டிக் கவசம் 25-26) என்பன முருகனே சிவமாய் இருந்தும் அருளுதலைக் குறிப்பன. முருகனுக்கே உரிய வேறு ஐந்தெழுத்து மந்திரமாக அருணகிரியார், "ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் என்று பூதி ஆகம் அணி மாதவர்கள்" என்று பழனித் திருப்புகழில் அருளுவார்.

இலக்கணக்குறிப்பு: ஐந்து ஆறு என்பன தொகைக் குறிப்புச் சொற்கள்.

8. பட்டேன் வெகுபா டுகள்பட் டுமிகக்
கெட்டேன் வருகே வலம்யா வையுமே
விட்டேன் இனிவே றிலைஎன் றுனையே
தொட்டேன் எதிர்தோன் றஎழுந் தருளே.

குறிப்புரை: பாடுகள் = துன்பங்கள். கேவலம் = அற்பத்தனம் தொட்டேன் = பொருந்தினேன்.

பொழிப்புரை: பெருமானே! நான் மிகப்பல துன்பங்களை அனுபவித்துவிட்டேன். மிகவும் கெட்டும் போய்விட்டேன். என்னை வந்து சேர்ந்த அற்பத்தனங்களை எல்லாம் முற்றாகக் கைவிட்டேன், இனி உன்னைத்தவிரக் கதி வேறு இல்லை என்று உன்னையே பொருந்தினேன்; எதிர்தோன்ற எழுந்தருளி அருள்க.

விளக்கம்: மிகப்பல துன்பம், அதனால் நிலைகெடல்,

அதனால் அற்பத்தனங்கள் என்று வருவது உலகியல். இவற்றை வெல்ல பெருமானே கதி என்றார்.

இலக்கணக்குறிப்பு: பாடு-முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

9. அத்தா பழனிக்கு அதிபா எனைஆள்
முத்தா படியின் முனிவின்று அவரின்
வித்தா ரமதா னமெய்வே சமதை
நத்தாது உனை நான் நவிலப் பணியே.

குறிப்புரை: அத்தா=சிவபெருமானே. முத்தா=இயல்பாகவே பாசங்களின் நீங்கியவனே. படி=உலகம். முனிவின்று = வெறுக்காது. வித்தாரம்=அளவு மிகுந்த. மெய்வேசம்= உடம்பில் தரித்த வேடம், நத்தாது=விரும்பாது.

பொழிப்புரை: சிவபெருமானே; பழனிக்கும் உரிமையுடையவனே; என்னை ஆள்கின்ற இயல்பாகவே பாசங்களின் நீங்கியவனே; உலகை வெறுக்காதவர்கள் அளவுக்கதிகமாக உடம்பில் தரித்த வேடத்தை விரும்பாது, உன்னையே பாட ஆணைதந்தருள்க.

விளக்கம்: உலகப் பற்றினை முனிந்து கைவிடாமல் பற்றறுத்தார் போல் வேடம் பூணுதலை "தவம் மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து வேட்டுவன் புள்சிமிழ்த்தற்று (274) என்பார் பொய்யாமொழியார். முத்தநாதனையும் எண்ணுக."

இலக்கணக்குறிப்பு: ஆள் முத்தா – வினைத்தொகை.

10. கங்கா ளன்அருள் கதிர்மா மணியே
மங்காது எனைநீ மகிழ்வித்து அருள்வாய்
சிங்கா ரவலங் க்ருதசே வலனே
நந்தாய் வனநா யகிநா யகனே.

குறிப்புரை: கங்காளன் = எலும்புக் கூடுகளாலான மலையணிந்த சிவபெருமான். மங்காது = கெடாது. சிங்காரம்=அழகு. வலம் = வெற்றி. க்ருதம் = செய்கை. தாய் = முதன்மை. வனநாயகி = குறிஞ்சிக்காட்டு வள்ளி நாச்சியார்.

பொழிப்புரை: அழகிய வெற்றிச் செயல்புரியும் சேவற்கொடி உயர்த்தவனே, நாங்கள் முதற்கண் அருள்பெறுதற்குரிய தாயாம் குறிஞ்சிக்காட்டு வள்ளிநாச்சியாரின் கணவனே, எலும்புக்கூடுகளால் ஆன மாலையணிந்த சிவபெருமான் அருளிய ஒளிவடிவான மாணிக்கமே, நான் கெடாது என்னை மகிழ்வித்து அருள்க.

விளக்கம்: புண்ணியவினைக் கழிவில் இறந்துபட்ட மால், நான்முகன் முதலாயினோர் எலும்பை அவர்களது நரம்பில் கோத்து அணிந்தும், முழுக்கூடாக அணிந்தும் ஈறிலாத்தனது தன்மையைச் சிவன் உணர்த்துவான். எனவே சிவபெருமானுக்குக் கங்காளன் என்றும் பெயருண்டு. இதனை;

"நங்காய் இதுஎன்னதவம் நரம்போடு எலும்பணிந்து
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந்தரத்து இருவர்
தங்காலம் செய்யத் தரித்தனன்காண் சாழலோ"

– திருவாச..திருச்சாழல்.11

என்பதால் அறிகிறோம். பெருமானின் அருளாகிய வீடுபேறு பெறுமுன், நமக்கு முதற்கண் அருள்புரிகின்றவள் அம்மையே என்பதை "நந்தம்மை ஆளுடையாள், தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்அருளே என்ன" (திருவா. திருவெம்பாவை.16) என்பதால் அறியலாம்.

11. தேடும் பொருள்தே வர்கள்மூ வர்களும்
நாடும் பொருள்நா வலர்பா வலர்கள்
பாடும் பொருள்பா ரினில்எத் திரமும்
கூடும் பொருள்ஆ கியகொற் றவனே

குறிப்புரை: பொருள்=உறுதிப்பொருள். மூவர்கள்= நான்முகன், மால், உருத்திரன் ஆகியோர். திரம்=நிலை.

பொழிப்புரை: நான்முகன், மால், உருத்திரன் ஆகிய மூவரும் தேடிவரும் உறுதிப்பொருளாகவும், நாவலர்களும் பாவலர்களும் தத்தம் வல்லமைக்கு நாடிவழிபடும் பொருளாகவும், உலக அன்பர்களின் எந்நிலையிலும் முத்தியில் வந்து கூடும் பொருளாகவும் உள்ள கொற்றவனே அருள்க.

விளக்கம்: "திருமாலொடு நான்முகனும் தேடியும் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக்கண்டு கொண்டேன்" என்ற திருவங்கமாலையை உட்கொண்டது "தேடும்பொருள் தேவர்கள் மூவர்களும்" என்ற தொடர். உலக அடியவர், சரியை கிரியை, யோகம் ஞானம் ஆகிய எந்நிலையினராயினும் அவருடன் முத்தியில் கூடும் பொருள் இவனே என்பதைப்

"பாரினில் எத்திரமும் கூடும் பொருள்" என்பது குறித்தது. உலகில் உள்ளவற்றில் பெருமான் அருவம் ஆக எந்த ஒரு நிலையிலும் கூடி இருக்கும் பொருளாவான் எனினும் அமையும்.

இலக்கணக்குறிப்பு: மூவர்களும் – தொகைக்குறிப்பு. நாவலர் பாவலர்கள் – உம்மைத் தொகைகள்.

12. முன்னே மறையின் முடிவே திகழும்
பொன்னே மணியே பொதுவாய் உலகுக்(கு)
அன்னே ததையே அறிவே உனையான்
என்நே ரமும்ஏத் தஎழுந் தருளே.

குறிப்புரை: முன்னே=அநாதியனே. முடிவு=முடிந்த முடிவு. ததையே = தாதையே = தந்தையே அப்பனே.

பொழிப்புரை: அநாதியனே-காலங்கடந்த பழமையனே; மறைகளின் முடிந்த முடிபாய் விளங்குகின்றவனே; ஒளிவிளங்கும் பொன்னே; மாணிக்கமே; உயிர்க்குலம் அனைத்துக்கும் பொதுவான தாயும் தந்தையும் ஆனவனே; உயிர்க்குலத்து அறிவே; உன்னைநான் எந்நேரமும் வழிபட எழுந்தருள்க.

விளக்கம்: "வல்லார் விரும்பும் நம் குன்றக்குடிக்கோயில் வளர் தேவனைப், பல்லாயிரம் கோடி அண்டத்தும் நிறைகின்ற பரம்என்றிடாது, அல்லார் களத்து ஆதிதரு மைந்தன் என்று ஓதி அயர்வோர்கள் பால், செல்லாதிருந்து ஆறெழுத்து ஓதல் கவுமாரர் செயலாகுமே" – (குன்றக்குடிக் கலம்பகம் 17)

என்பதால் பெருமானைப் பொதுவன் என்பார் வண்ணச் சரபர். மேலும் "அம்மையப்ப ரேஉலகுக்கு அம்மையப்பர்" என்ற திருக்களிற்றுப் படியார் இவனது பொதுமை உணர்த்துவன. ஞானமயனான இவன் உயிர்க்குலத்து அறிவாகவும்-நிற்கின்றவனாதலின் "அறிவே" என்றார். எந்நேரமும் ஏத்துதலாவது, "நற்றவா உன்னை நான் மறக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே" என்றவாறு ஏத்துதல்.

இலக்கணக்குறிப்பு: தாதையே என்று வரற்பாலது "ததையே" என்று முதல்குறுகி வந்தது செய்யுள் விகாரம். தந்தையே என்றன் இடைக்குறையுமாம்.

13. சிங்கத்(து) அமர்பார் வதிதே வியினகு)
அங்கத்(து) உறுமார் வருபால் அமுதம்
பொங்கக் கொளுபுன் னகைவாய் உடையாய்
வங்கக் கிரியோன் மகிழும் சுதனே.

குறிப்புரை: அங்கம் = உறுப்பு. பொங்க=வாய் கொள்ளும் அளவின் மிகுந்து வழிய. உடையாய்=உடைய திருஞான சம்பந்தனே. வங்கக்கிரி=வெண்மையான கயிலைமலை -பனியேமூடிய கயிலை மலை.

பொழிப்புரை: ஆண்சிங்கத்தின் மீது எழுந்தருளிய பார்வதி தேவியின் திருமார்பில் அமைந்த இரு உறுப்புகளாலும் சுரந்தளித்த பாலாகிய அமுதத்தை வாயிலிருந்து வழியப் பருகிய புன்முறுவல் கொண்ட திருஞான சம்பந்தராகிய முருகனே; வெண்மையே வடிவான கயிலை மலையில்

எழுந்தருளிய சிவபெருமான் மகிழும் தூய மைந்தனே அருள்க.

விளக்கம்: ஆண்சிங்கம் அம்மையின் ஊர்தி என்பதை, "சங்கமும் சக்கரமும் தாமரைக்கை ஏந்தி, செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்" என்று சிலம்பு வேட்டுவவரியும் குறிப்பிடும். அன்னை தந்த பாலமுதைத் திருஞான சம்பந்தர் கடைவாய் வழியப்பருகியதைச் சிவபாத இருதயர் கூற்றில் வைத்து, "யாரளித்த பாலடிகில் உண்டதுநீ" என வெகுளா, எச்சில் மயங்கிட உனக்கு ஈது இட்டாரைக் காட்டு" என்பார் சேக்கிழார்பெருமான். நீள் பனிமால் வரைப்பாலது.... கயிலைத் திருமலை (பா.11) என்றும் "சோதி வெண்கயிலை" (பா.18) என்றும் சேக்கிழார் கயிலையைக் குறிப்பதால் இவர் "வங்கக் கிரி" என்றார்.

"பரவும் காதலியார் மணிவயிற்றில் உருத்தெரிய வரும்பேறு உலகுய்ய உளதாக" - பெரிய.. திருஞான....20:4 என்பதறிந்தவரும்; "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" (கந்தர் அநுபூதி 12:2) என்பதிலும் "அடி அந்தமிலா அயில்வேல் அரசே" (கந்தர் அநுபூதி 19:3) என்பதிலும் இவர் அசையா நம்பிக்கையுடையவராதலாலும் இவரது இந்நூலில் முருகர் அநுபூதி "தோற்றம் உண்டேல் மரணம் உண்டு" என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளின் கருத்தை உள்ளடக்கிப் பிறவியிலான் முருகன் என்பதைப் "பவம் ஏகுறு பான்மை படைத்தவனாய்" (பா 28:2) என்பதனாலும் இதுவே இவர் கருத்து என்க. "திருஞானசம்பந்தர் முருகனே" என்றது இவர் காலத்துப் "பிறன்கோள் கூறல்" என்று விடுக்க.

இலக்கணக்குறிப்பு: பார்வதியின-அகரம் பலவின்பால் வினைமுற்றுவிகுதி.

14. கொல்லா விரதம் கொளவே தினமும்
வல்லாய் எளியேன் மனதில் புகுவாய்
நல்லார் தினம்நா டியநா யகனே
சல்லா பமனோ கரசண் முகனே

குறிப்புரை: சல்லாப=உல்லாசமானவனே. மனோகர=அழகனே.

பொழிப்புரை: நல்லவர்கள் நாடோறும் நாடித்தொழும் தலைவனே; உல்லாசமான அழகனே; ஆறுதிருமுகனே; வல்லவனே; எளியேன் நாடோறும் கொல்லாவிரதம் மேற்கொண்டொழுக என்மனம் புகுந்து அருள்க.

விளக்கம்: "அறவினை யாதெனின்கொல்லாமை; கோறல் பிறவினை எல்லாம் தரும்" ஆதலின் "கொல்லா விரதம் ஒன்று கொண்டாரே நல்லோர் மற்று அல்லாதார் யாரோ அறியேன் பரா பரமே" என்றார் தாயுமானவரும். இவற்றின் எதிரொலியே இப்பாடற் பகுதி.

15. நாதா திரைஅங் கையில்நக் கியவன்
போதா மிகுபூ சுரர்வந் துதொழும்
பாதா துயர்நீந் துபறக் கவரம்
தாதா புவியில் தனிநா யகனே.

குறிப்புரை: திரை = கடல். அங்கை = உள்ளங்கை. நக்கியவன்=உண்டவன்-அகத்திய முனிவர். போதா=ஞானமாய் உள்ளவனே. பூசுரர்=அந்தணர். நீந்து=கடந்து. பறக்க=விட்டோட. தாதா=தந்தருள் தந்தருள்.

பொழிப்புரை: தலைவனே; கடல் நீரை உள்ளங்கையில் ஏந்தி உண்ட அகத்திய முனிவரின் ஞானமாக உள்ளவனே; அளவற்ற அந்தணர்கள் வந்து வணங்கும் திருவடியனே; நான் என் துயர்களைக் கடந்து நிற்கவும், அவை என்னை விட்டுப் பறந்தோடவும் புவியில் விளங்கும் ஒப்பற்ற தலைவனே வரம் தந்தருள்க தந்தருள்க.

விளக்கம்: "அள்ளற் கடலை ஒருநீ அகங்கை அடக்கிக் கள்ளத்து அவுணன் நிலைகாட்டி நம் கண்ணில் வைத்த கொள்ளைக் கருணை உலகு எங்கணும் கொண்டது எந்தாய்" (கந்தபுரா.அகத்தியப்...5) என்பது குறுமுனி கடல் உண்டது கூறும். "கும்ப மாமுனிக்குக் குருதேசிகனே"-பழமுதிர்சோலை 62. என்பது தேவராய அடிகள் கந்தர் சஷ்டிக்கவசம்.

இலக்கணக்குறிப்பு: திரை=தானியாகு பெயர். தாதா-விரைவு பற்றிய அடுக்குத்தொடர்.

16. ஆனாய் உலகுக்(கு) அதிமா பதியாய்
வானாய் நிலனாய் வருமா புனலாய்
ஊனாய் உயிராய் உடலாய் ஒளியாய்த்
தானாய் இலகும் தனிநா யகனே.

குறிப்புரை: அதிமாபதி=மாபெருந்தலைவன். ஊன்=உடம்பு. உடல்=பொருள். தானாய்=தானேயாய்.

பொழிப்புரை: உலகுக்கு மாபெருந்தலைவனாய், வானமாய், நிலமாய், ஓடிவரும் நீராய், உடலாய், உடலில் உறையும் உயிராய், பிறபொருள்களாய், ஒளியாய், இவற்றோடு தானேயாய் விளங்கும் ஒப்பற்ற தலைவனே அருள்க.

17. காடாய் மலையாய்க் கரியாய்ப் பரியாய்
வீடாய் நிலையாய் வெளியாய் ஒளியாய்
நாடாய் நடுவாய் நடுநின் றவராய்
ஏடாய் மறையாய் இலகும் பரனே.

குறிப்புரை: வீடு=வீடுபேறு. நிலை=என்றும் நிலைத்த முதற் பொருளாக. நடுவாய்=நீதியாக. நடுநின்றவராய்=நடுவு நிலையனாக. ஏடு=மேன்மை.

பொழிப்புரை: காடாக, மலையாக, யானையாக, குதிரையாக வீடுபேறாக, என்றும் நிலைத்த முதற்பொருளாக, வெளியாக, ஒளியாக, நாடாக, நீதியாக, நடுவு நிலையனாக, மேன்மையாக, மறைபொருளாக விளங்கும் மேலானவனே அருள்க.

18. மாலாய் அரனாய் மாலின் சுதனாய்
நூலாய் உணர்வார் நுவலும் பொருளாய்
பாலாய் நுரையாய்ப் பரவும் பிறையாய்க்
காலாய் அமரும் கருணா கரனே.

குறிப்புரை: மாலின் சுதன்=திருமாலின் மகனான நான்முகன். நுவலும்=போற்றிக் கூறும். நுரை=வெண்ணெய். கால்=காற்று. ஆகரன்=உறைவிடமானவன்.

பொழிப்புரை: திருமாலாக, உருத்திராக, திருமாலின் மகனான நான்முகனாக, ஞானநூல்களாக. ஞானியர் போற்றும் பொருளாக, பாலாக, அதிலுள்ள வெண்ணெய் ஆக. அனைவரும் வணங்கும் மூன்றாம் பிறையாக, காற்றாக, பொருந்திய கருணையின் உறைவிடமாக உள்ளவனே அருள்க.

விளக்கம்: "விதிமுதல் உரைக்கும் செயலினுக்கு எல்லாம் ஆதியாய் வைகிய செவ்வேள்"-(கந்தபுரா..அயனைச் சிறைபுரி..18) விதிமுதல் உரைக்கும் செயல்=படைத்தல் காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில். "ஐந்தொழிலுமேவித் தனி நடத்தும் எம்கோவே (கந்தர் கலி. கண்ணி 64.) (இது ஐந்தொழிலும் அத்தொழிற்குரியயார்பால்மேவி என்றும் அவர்களை ஏவி என்றும் பொருள் தருவது). ஐந்தொழிற்கும் நீங்காத பேருருவாய் நின்றானே (கந்தர் கலி..கண்ணி.59) என்பன, தொழில் புரியும்" "மாலாய் அரனாய் மாலின்சுதனாய் மட்டுமின்றி அருத்தா பத்தியால் மறைத்தல், அருளல்புரியும் மகேசுவரன் சதாசிவனாகவும் பெருமான் நிற்கின்றமையை வலியுறுத்துவன. "ஒருவன் நீ மும்முதற் கடவுளும் இளைப்பாற உலகெலாம் தலையளித்தும் போற்றும் திறத்தினை" என்ற முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் சிறுபறைப் பருவ முதற் செய்யுட் பகுதியும் இதனை வலியுறுத்தும்.

விளக்கம்: "பாலின் நுரையை" - பாலிற்படுநெய் என்பார் அப்பரடிகள்

19. ஒன்றாய்ப் பலவாய் உளதாய் இலதாய்
நன்றாய்க் கொடிதாய் நவிலப் பலரும்
பொன்றாப் பொருளாய்ப் புகழாய்த் திகழாய்
குன்றாக் குடிவாழ் குமரா பரனே.

குறிப்புரை: உளதாய்=உருவம் உள்ளதாக. இலதாய்=உருவம் இல்லாததாக - அருவமாக. பொன்றா=என்றும் அழியாத. திகழ்=ஒளி.

பொழிப்புரை: ஒன்றாக, பலவாக, உருவமுள்ளதாக, அருவமானதாக, நல்லார்க்கு நன்றாக, அல்லார்க்குக் கொடிதாக, பலராலும் கூறப்படும் அழியாப் பொருளாக, புகழாக ஒளிவடிவாகக் குன்றக் குடியில் எழுந்தருளியுள்ள குகனே; மேலானவனே அருள்க.

20. காராய்க் கருவாய் கருவின்(று) உடரின்
தாராய்ப் படிமேல் சலமாய்ச் சலம்ஊர்
ஆராய்க் குமிழாய் அதின்வாழ் வனவாய்ச்
சீராய்ப் பொலியும் செகதீஸ் வரனே.

குறிப்புரை: கார்=மேகம். கருவின்று=கருமட்டுமில்லாமல் உடர்=உடல். தார்=ஒழுங்கு. சலம்=நீர். சீர்=தலைவன். செகதீஸ்வரன்=உலகுக்கெல்லாம் கடவுள்.

பொழிப்புரை: மேகமாக, கருவாக, கருமட்டுமில்லாமல் அதனால் அமையும் உடம்பின் ஒழுங்குப்பட்ட செயலாக,

உலகில் நீராக, நீர் ஊர்ந்து செல்லும் ஆறாக, நீர்க்குமிழாக, அந்நீர்வாழ் உயிரினமாக, அனைத்துக்கும் தலைமையாகப் பொலிகின்ற உலகுக்கெல்லாம் கடவுளே அருள்க.

விளக்கம்: உடலின் ஒத்திசைவு உடைமை காரணமாகவே உயிரினம் வாழ்கின்றது. இவ்வொத்திசைவின்றேல் -பிணம்- உயிரின நலவாழ்வும் இல்லை என்பது அறிவியல் ஆதலின் உடரின் தாராய் என்றார்.

இலக்கணக்குறிப்பு: ஆறாய் என்று வரவேண்டியது ஆராய் என்று வந்தது எதுகை நோக்கிய செய்யுள் விகாரம். உடர்-இலக்கணப் போலி.

21. முத்தாய் மணியாய் முதிரும் பவளக்
கொத்தாய் வயிரக் குழுவின் ஒளியாய்
வித்தாய் மரமாய் விரியும் கொடியாய்
சித்தாய் இலகும் சிவசண் முகனே.

குறிப்புரை: விரியும் = படரும். சித்து = அறிவுடைய பொருள்.

பொழிப்புரை: முத்தாக, மணியாக, முதிர்ந்த பவளக் கொடியின் கொத்தாக, வயிரக்கூட்டத்தின் ஒளியாக, விதையாக, மரமாக, படரும் கொடியாக, அறிவுடைப் பொருளாக விளங்கும் சிவமேயான ஆறுமுகனே அருள்க.

விளக்கம்: "வித்து மரம் கொடி" என்றதனால் "அவ்வயின் மொழியாததையும் முட்டின்று முடித்தல்" என்ற உத்தியால் புல்லும் செடியும் கொள்க. "சித்து" என்றதனுள் இரண்டு,

மூன்று நான்கு, ஐந்து அறிவுடையன மற்றும் ஆறறிவுடைய மனிதர் அடங்கும்.

22. வண்டே நுகரும் மலரின் மதுவே
கண்டே பலவின் கனியே கழையின்
துண்டே கதலிச் சுளையின் சுவையே
பண்டேர் இலகும் பழனிக் குருவே.

குறிப்புரை: கதலி=வாழை, பண்டே-அநாதிதொட்டே; ஏர் இலகும்=அழகேவடிவாய் விளங்கும்.

பொழிப்புரை: மலர்த்தேனை நுகரும் வண்டே, மலர்த்தேனே, கற்கண்டே, பலாச் சுளையே, அடிக் கரும்புத்துண்டே, வாழைக்கனிச் சுளையின் சுவையே, அநாதி காலந்தொட்டே அழகே வடிவாய்ப் பழனியிலும் எழுந்தருளி விளங்கும் குருநாதா அருள்க.

விளக்கம்: நுனிக்கரும்பினும் அடிக்கரும்பு மிக்க சுவையுடையதாதலின் அடிக்கரும்புத்துண்டு எனப்பெற்றது. "ஈசனுக்கும் குறுமுனிக்கும் எழிலருணைப் புலவனுக்கும் பேசரிய பிரணவத்தின் பெரும்பொருளை அறிவித்தாய்" என்ற (குன்றக்குடிக் கலம்பகம். தாழிசை) வண்ணச் சரபர் வாக்கு முருகன் "குரு" என்பதுணர்த்தும். "குருவும் கெழுவும் நிறனாகும்மே" (தொல்.உரியியல்.5) என்றதால் ஒளிவடிவன் என்பதும் அமையும்.

23. அஞ்சொன் றுடநா லதுவாய் அதின்மேல்
அஞ்சொன் றுடநா லதுவாய் மருநால்

அஞ்சொன் றுடநா லதுவாய் அதின்மேல்
அஞ்சொன் றுடனாய் அமரும் பரனே.

குறிப்புரை: அஞ்சு=ஐம்பூதங்கள். ஒன்றுடன் நால்=1+4=5. அதுவாய்=ஐம்பூதப் பண்பாகிய திண்மை, தண்மை, வெம்மை, சலித்தல், கலப்பு ஆகிய ஐந்துமாகி. அதின்மேல்=அதன்கண் அதுவாய்=ஐம்பூதத் தன்மாத்திரைகளாகிய நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஓசை ஆகிய ஐந்துமாகி, மரு=மருவி-கலந்து. நால் = தங்கிய. ஒன்றுடன் நாலதுவாய் = சதா சிவனோடு பிறநால்வரும் ஆகி. இதின்மேல் = இவர்கட்கும் மேலான. ஒன்று = அதோமுகமும். உடனாய்=ஒருசேர ஆறுதிருமுகங்களாக. அமரும்=எழுந்தருளிய, பரனே=மேலானவனே.

பொழிப்புரை: நிலம்நீர் தீவளி விசும்பு ஆகிய ஐம்பூதங்களின் ஐந்து பண்புகளாகிய, திண்மை, தண்மை, வெம்மை, சலித்தல் கலப்பு ஆகியனவாய்; இப்பண்புகளில் ஐம்பூதத்தின் தன் மாத்திரைகளாகிய நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஓசைகளாய்; இவற்றுடன் கலந்துதங்கிய பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் ஆகிய ஐவருமாய்; இவர்கட்குமேலான சிவபெருமானின் ஐந்து திருமுகங்களும், அதோ முகமும் ஆக ஆறுதிருமுகங்களையும் கொண்டு எழுந்தருளியுள்ள அருள்தரு சண்முகநாதப்பெருமானே அருள்க.

விளக்கம்: ஐம்பூதப்பண்புகளை, "மண்கடினமாய்த் தரிக்கும் வாரி குளிர்ந்தே பதமாம், ஒண்கனல் சுட்டு ஒன்றுவிக்கும், ஓவாமல் - ஒண்கால் பரந்து சலித்துத் திரட்டும், பார்க்கில் ஆகாயம் நிரந்தரமாய் நிற்கும் நிறைந்து" - உண்மை

விளக்கம் 9. என்பதும்; ஐம்பூத அதிதெய்வங்களை "பாராதி ஐந்துக்கும் பன்னும்அதி தெய்வங்கள் ஆர்ஆர்? அயனாதி ஐவராம்"--உண்மை விளக்கம். 7. என்பதும் உணர்த்தும். சிவபெருமானின் 5 திருமுகங்களும் அதோ முகமும் ஆக ஆறு திருமுகங்கள் முருகனுக்கு என்பதை "ஐந்துமுகத் தோடு அதோமுகமும் தந்து திருமுகங்கள் ஆறாகி"-கந்தா கலிவெண்பா என்பது உணர்த்தும்.

இலக்கணக்குறிப்பு: அஞ்சு, அஞ்சொடு ஒன்று என்பன தொகைக் குறிப்புகள்

24. பஞ்சஞ் தீரிமற்று ஒருபஞ்சமிரு
பஞ்சஞ் சதுர்பஞ் சமொர்பஞ் சதிரி
பஞ்சந் துவம்ஆ கினைபற் றுசதுர்
பஞ்சம் எனவென் றபரம் பரனே.

குறிப்புரை: பஞ்சம்=பஞ்சாட்சரம்-திருவைந்தெழுத்து. தீரி= மூவெழுத்து - சிவாய; இரு=ஈரெஎழுத்து சிவ. சதுர்=நாலெழுத்து ஓம்சிவாய; பஞ்சம்தீரி=5+3=எட்டெழுத்து ஓம்ஆம் ஒளம் சிவாயநம (எண்ணிக்கையில் மெய் எழுத்து இடம் பெறாது) துவம்=வசி என்ற இரண்டெழுத்து; சதுர்=நாலெழுத்தாகிய சிவசிவ; பஞ்சம்=ஐந்தெழுத்து ஆகிய சிவாயநம; வென்ற=மேம்பட்டு விளங்கும்.

பொழிப்புரை: திருவைந்தெழுத்தில் "சிவாய" என்ற மூவெழுத்து; திருவைந்தெழுத்தில் "சிவ" என்ற ஈரெழுத்து; திருவைந்தெழுத்தில் "ஓம்சிவாய" என்ற நாலெழுத்து; திருவைந்தெழுத்தில் "ஓம்ஆம்ஒளம் சிவாயநம" என்ற

எட்டெழுத்து, திருவைந்தெழுத்தில் "வசி" என்ற ஈரெழுத்து; திருவைந்தெழுத்தில் நாலெழுத்தாகிய சிவசிவ; இவையனைத்தையும் பற்றி நிற்கும் திருவைந்தெழுத்தாகிய "சிவாய நம" என்று அனைத்திலும் மேம்பட்டு விளங்கும் மேலானவனே அருள்க.

விளக்கம்: திருவைந்தெழுத்தின் இந்த எல்லா வகைகளிலும் நிலைத்து மேம்பட்டு விளங்குகின்றவன், சிவமேயான அருள்தரு சண்முகநாதப் பெருமான் என்க.

25. மறைநா லும்அ தாகிவ ழிப்படியே
இறையோன் முதல்ஐ வரும்ஐந் தொழிலைக்
குறையா துநடத் தியகொள் கையுமாய்
முறையே புரியும் முருகா குகனே.

குறிப்புரை: இறையோன் முதல் ஐவர் = சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், திருமால், நான்முகன். ஐந்தொழில்= இவ்வைவருக்கும் உரிய அருளல், மறைத்தல், அழித்தல், காத்தல், படைத்தல் என்பன. முறையே புரியும்=முறைப்படுத்தும்.

பொழிப்புரை: நான்கு மறைகளும் கூறும் வழியில் சதாசிவன், மகேசன், உருத்திரன், திருமால், நான்முகன் ஆகிய ஐவருமாகி, அருளுதல், மறைத்தல், அழித்தல், காத்தல், படைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் குறைவின்றி நடத்தும் கொள்கை யுடையவனாய் முறைப்படுத்தும் முருகா; குகனே அருள்க.

விளக்கம்: ஐந்தொழிலையும் குறையாது நடத்துதலாவது அவற்றை அருளுதல் என்பது கருதியே நடத்துதல், "அழிப்பு இளைப்பாற்றல்... அருளே எல்லாம்" (சித்தியார்.37) என்பது இதனை வலியுறுத்தும். குன்றக்குடியானை, "ஐவகைத் தொழில் செய்வோர்க்கும் நாயகன்" (குன்றக்குடிக்கலம்பகம்.88:2) என்பார் வண்ணச்சரபர்.

இலக்கணக்குறிப்பு: ஐவர், ஐந்தொழில்-தொகைக் குறிப்புகள்.

26. ஆறா கியசாத் திரமா கியுமற்(று)
ஈறாறு) உடனா றுபுரா ணமதாய்
ஏறா கலைஎட் டுடன்எட் டுபொரு
ஆறாய் இலகும் வடிவே லவனே.

குறிப்புரை: ஆறுசாத்திரம்=வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை என்பன. ஈராறு உடனாறு புராணம்=பிரம்ம, பத்ம, பிரமவைவர்த்த, இலிங்க, விஷ்ணு, ஆருட, அக்னி, மச்ச, நாரத, வராக, வாமன, கூர்ம, பாகவத, ஸ்காந்த, சிவ, மார்க்கண்டேய, பிரம்மாண்ட, பவிஷ்ய புராணங்கள், ஏறா=அழியாத. கலை எட்டுடன் எட்டு=அறுபத்து நான்கு கலைகள். அவை ஆடல்பாடல் முதலிய அறுபத்து நான்கு, பொருஆறாய்=தம்முன் ஒத்தவிதமாய்.

பொழிப்புரை: ஆறு சாத்திரங்கள், பதினெண் புராணங்கள், அழியாத அறுபத்து நான்கு கலைகள் ஆகியவற்றுள் ஒத்தவிதமாய் விளங்கும் கூரிய வேல்தாங்கியவனே அருள்க.

இலக்கணக்குறிப்பு: ஆறு, ஈராறு, எட்டெட்டு என்பன தொகைக்

குறிப்புகள். ஈராறு என்பது, ஈறாறு என்று வந்தது எதுகை நோக்கிய செய்யுள் விகாரம்.

27. எட்டெட் டுடன்என் கிறகோ ணமதாய்
எட்டென் பனதிக் குகள்எங் கணுமாய்
எட்டென் பனஅட் சரம்ஏ கமதாய்
எட்டென் கிறஅட் சரஏ கரகனே.

குறிப்புரை: எட்டுடன் எட்டு= 16 வகை. கோணம்= கோணத்திசையின் உட்கோணங்களாய். எட்டு என்பன திக்கு=எண்திசை. எட்டு என்பன அட்சரம் ஏகம் = இறைமைக் குணங்கள் எட்டினையும் உடைய ஓர் எழுத்து-ஓம். எட்டு என்கிற அட்சரம் ஏகம் = தமிழில் எட்டினைக் குறிக்கும் அகரஉயிர்.

பொழிப்புரை: கோணத்திசையின் உட்கோணத்திசை பதினாறுமாக, எட்டுத்திசைகள் எங்குமுள்ள பொருளாய், இறைமைக் குணங்கள் எட்டினுக்கும் உரிய ஓம் என்ற ஒரே எழுத்தாய், தமிழில் எட்டினைக் குறிக்கும் அகரஉயிர் போன்றவனாய் திருவேரகத்திலும் விளக்கமுற எழுந்தருளியுள்ளவனே அருள்க.

விளக்கம்: முருகப்பெருமான் எட்டுத் திசைகளாக மட்டுமின்றி, அவற்றின் கோணத்திசை பதினாறுமாகவும் உள்ளான் என்பதை இறைபற்றிக் கூறும் பட்டினத்து அடிகள் "எட்டுத் திசையும் பதினாறு கோணமும் முட்டித் ததும்புசோதி" என்பதால் அறியலாம். கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, வடகிழக்கு, தென்கிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு என்பன

எண்திசை. இறைமைக் குணங்கள். எட்டாவன: தன்வயத்தனாதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவிலாற்றல் உடைமை, வரம்பிலின்பமுடைமை என்பன. அகரஉயிர்; பிறஉயிர் எழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் ஆகியவற்றில், தனது ஒலிவடிவான அங்காத்தலாலும், வரிவடிவான சுழி, வளைகோடு, கிடைக்கோடு, குத்துக்கோடு முதலிய வடிவங்களாலும் நிறைந்து ஒன்றாய் உடனாய் வேறாய் விளங்குதல்போல இறைவன் உயிர்ப்பொருள் உயிரில் பொருள் ஆகியவற்றில் நிறைந்து ஒன்றாய் உடனாய் வேறாய் விளங்குகிறான் என்க.

இலக்கணக்குறிப்பு: எட்டுடன் எட்டு, எட்டு -- தொகைக் குறிப்புகள்.

28. நயநா யகரா கியநா தனுமாய்ப்
பவம்ஏ குறுபான் மைபடைத் தவனாய்
தவம்மே வியசற் சனர்தா ணுவுமாய்
சிவமே வியசற் குணசெந் திலனே.

குறிப்புரை: நயநாயகர்=மேலான அரசன். நாதன்=சிவபெருமான். பவம் ஏகுறு=பிறவியற்ற. பான்மை=தன்மை. சற்சனர்= நன்மக்கள். தாணு=பற்றுக்கோடு. சிவம்=மங்களத்தன்மை.

பொழிப்புரை: மேலான அரசனாகிச் சிவபெருமானுமாய், பிறவியற்ற தனிமை படைத்தவனாய், தவநெறி பொருந்திய

நன்மக்கட்குப் பற்றுக்கோடாய், மங்களத் தன்மையுடனாகிய சீரியகுண வடிவாகத் திருச்செந்தூரிலும் எழுந்தருளி யுள்ளவனே அருள்க.

விளக்கம்: முருகன் பிறவியற்றவன் எனவே இறப்புமற்றவன். "தோற்றம் உண்டேல் மரணம் உண்டு"-திருமுறை. திருஎதிர்கொள்பாடி.2:1 என்பதால் பிறவியிலி மரணமிலி இவன் என்க. தவம் மேவிய சற்சனர் பற்றற்றவர்கள் ஆதலின் பற்றற்றானைப் பற்றுக்கோடாய்க் கொண்டனர் இனம் இனத்தோடு ஆதலின். இறைவனின் சீரிய எட்டுக்குணங்கள் முன் கூறப்பெற்றன.

29. அண்டத்(கு) உறும்அந் தரமண் டலமாய்
அண்டர்க்(கு) ஒருஅன் புளநா யகனாய்
அண்டத் தினும்அப் புறம்அப் புறமாய்
அண்டத்(கு) உறும்ஆ வியும்ஆ னவனே.

குறிப்புரை: அண்டம்=அண்டவெளி.அந்தரம்=ஆதரவற்றுத் தனித்தனியாயுள்ள. மண்டலம்=உலகங்கள். அப்புறம் அப்புறமாய்=அப்பாலைக்கு அப்பாலாய். ஆவி=உயிர்க்குலம்.

பொழிப்புரை: அண்டவெளியில் தனித்தனியுள்ள உலகங்களாக, அண்டத்தவர் அனைவர்மீதும் அன்புள்ள தலைவனாக, அண்டம் கடந்த அப்பாலைக்கப்பாலாய் உள்ள உலகங்களில் எல்லாம் உறையும் உயிர்க்குலமாகவும் உள்ளவனே அருள்க.

விளக்கம்: "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம், அளப்பரும் தன்மை வளப்பெருங்காட்சி, ஒன்றனுக்கு ஒன்று நின்று எழில் பகரின் நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன"-என்ற திருவாசகம் திருவண்டப் பகுதி நோக்கத்தக்கது. "அண்டம் கடந்தபொருள் அளவில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்"- திருப்பல்லாண்டும் உள்ளங்கொளற்குரியது. அண்டத்து உள்ள உலகங்கள் நம் கட்புலனாகா ஈர்ப்புவிசை காரணமாக இயங்குகின்றன என்பது அறிவியல். இதனை இவர் அந்தரம்=கட்புலனாகும் ஆதரவு இல்லா நிலை என்று சுருங்கக்கூறுகிறார். அண்டவெளி தனக்கோர் எல்லையின்றி மேன்மேலும் விரிந்து செல்கின்றது என்ற அண்ட வெளியியலை இவர், "அண்டத்தினும் அப்புறம் அப்புறமாய்" என்கிறார். "எல்லா உலகமும் ஆனாய் நீயே" என்ற அப்பரடிகளின் திருவையாற்று ஆறாம் திருமுறைத்தொடர் "அண்டத்து உறும் ஆவியும் ஆனவனே" என்று இங்கு வெளிப்படுகின்றது.

30. பொங்குஆர் அரவும் புனலும் பிறையும்
கொங்குஆர் மலரும் கொன்றைத் தொடையும்
அம்கார் அறுகும் அணியும் பரையான்
பங்கார் அருளும் பழனிக் குமரா.

குறிப்புரை: பொங்குஆர்=சினம்பொருந்திய. கொங்கு=மணம். தொடை=மாலை. அம்கார்=அழகிய பசிய. பரையான்=சிவபெருமான். பங்கார்=பங்கினளாகிய அம்மை.

பொழிப்புரை: சினம் பொருந்திய பாம்பும், கங்கையும், மூன்றாம் பிறையும், மணம் மிக்க மலர்களும், கொன்றை

மாலையும் அழகிய பசிய அறுகம்புல்லும் சூடிய சிவபெருமானின் இடப்பாகம் பொருந்திய அம்மை அருள, பழனிமலையிலும் எழுந்தருளியுள்ள குமரனே அருள்க.

விளக்கம்: பரையாகிய அம்மையை-பார்வதிதேவியைப் பங்கில் உடையவன் பரையான் எனப்பெற்றான்.

இலக்கணக்குறிப்பு: அரவும் புனலும் பிறையும் ---- முதலியவற்றின் உம்மைகள் எண்ணும்மைகள்.

31. மறியும் மழுவும் மன்னும் துடியும்
கரியின் உரியும் கடுஆர் மிடறும்
வரியின் அதளும் வகையாய் அணியும்
அரியின் பெரியான் அருளும் மணியே.

குறிப்புரை: மறி=மான்கன்று. துடி=உடுக்கை. கரி=யானை. உரி=தோல். கடு=விடம். வரி=வரிப்புலி. அதள்=தோல். வகையாய்=சிறக்க. அரி=திருமால்.

பொழிப்புரை: மான்கன்று, மழுவாயுதம், பெருமை பொருந்திய உடுக்கை, போர்வையாக யானைத்தோல், திருக்கழுத்தில் நஞ்சு, வரிப்புலித் தோலாடை ஆகியவற்றைச் சிறப்புற அணிந்தவனும் திருமாலுக்கும் பெரியவனுமாகிய சிவபெருமான் அருளும் மாமணியே அருள்க.

விளக்கம்: படைப்பின் குறியீடு உடுக்கையாதலின் அதற்கு "மன்னும்" என்ற அடை தந்தார். "உரி"யாவது பசுந்தோல்-இங்கு, பக்குவப் படுத்தாத தோல். "அதள்" என்பது பக்குவப்படுத்தப்பெற்றதோல்.

32. கல்லால் அடியில் கனயோ கமுறப்
பொல்லா மதவேள் பூவின் கணையைச்
சல்லா பமதாய்ச் சாடப் பொடிசெய்
வில்லாம் விழியோன் வேண்டும் குருவே.

குறிப்புரை: கனயோகம்=மனம் ஒன்றிச் செறிந்த யோகம். மதவேள்=மன்மதன். கணை=அம்புகள். சல்லாபமதாய்= உல்லாசமாக. சாட=மேல்எறிய. பொடி=நீறு. வில்=ஒளி.

பொழிப்புரை: கல்லால மரத்தின் அடியில், மனம் ஒன்றிச் செறிந்த யோகத்தில் இருந்தபோது, மன்மதன் தனது மலர்க் கணைகளை உல்லாசமாகத் தன்மேல் எறிய, அவனை நீறாக்கிய தீ ஒளிவடிவான சிவபிரான் விரும்பும் குருவே அருள்க.

விளக்கம்: "நறுமலர் வாளி ஐந்து நாதன்மேல் செல்ல விட்டான்;" விட்டவெம் பகழி ஐந்தும் வியத்தகு விமலன்மீது பட்டலும் சிறிதே வேளைப் பார்த்தனன், பார்த்தலோடும் கட்டழல் பொதிந்த நெற்றிக்கண்ணது கடிதே காமன் சுட்டது; -கந்தபுரா. காமதகனப்.88-89. என்பது காண்க.

33. தில்லைப் பதியின் திருமால் பிரமன்
எல்லைப் பொருளே எமைஆட் கொளவே
தொல்லைப் பழநோய் தொலைஎன் றவரின்
சொல்லைப் பருகும் தூயோன் சுதனே.

குறிப்புரை: எல்லை=முடிந்த முடிவு. தொல்லைப்பழநோய்= மிகப்பழமையான இருவினையும் இவற்றாலான பிறவியும். பருகும்= ஏற்று அருள்புரியும்.

பொழிப்புரை: தில்லைப் பொன்னம்பலத்தில் கூத்தப் பெருமானிடம் திருமாலும் நான்முகனும் "முடிந்த முடிபாக விளங்கும் பரம்பொருளே நீர் எம்மை ஆட்கொள்ளும் பொருட்டு எமது பழைமையான இருவினைகளையும் தொலைத்தருள்க" என்று வேண்ட அதன்படி அவர்களது சொல்லை ஏற்று அருள்புரிந்த தூயவனாகிய சிவபெருமானுக்குத் தூயமகனே அருள்க.

விளக்கம்: உயிர்க்குலம் அடைய வேண்டிய இடத்து எல்லை இந்திரன் முதலிய இறையவர் பதங்களல்ல; இவை அனைத்துக்கும் மேல் எல்லையாகிய அந்தத் மில் இன்பது அளவில் வீடாகிய பெருமான் திருவடியே எல்லையாதலின் எல்லைப் பொருளே என்றார். திருமாலும் நான்முகனும் முன்பு செய்த பசுபுண்ணியத்தால் அப்பதவி பெற்றவர்கள். பசு புண்ணியம் அனுபவித்துக் கழியும் நிலையில் மீண்டும் பிறக்க நேரிடுமாதலாலும், முன்புசெய்த பாவவினைப் பயனை அனுபவிக்க நேருமாதலாலும் அதனால் அவை அளவற்றன ஆதலால் "தொல்லைப் பழநோய்" என்றார். "வித்தும் மரமுமாய் வருவது வினையும் பிறப்பும் ". இவற்றை அனுபவித்துக்கழித்தல் இயலாது. "கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாம் அடியோம் செய்வினை வந்து எம்மைத் தீண்டப் பெறா திருநீல கண்டம்" என்ற திருஞான சம்பந்தர் வாக்குபடி "தொல்லைப் பழநோய் தீர்க்க" இருவரும் அவனை வேண்டினர்.

34. ஆங்கா ரமதாய் அயனும் திருவும்
பாங்காய் அவரின் பலமும் தெரியப்
பூங்கா லடிபொன் முடிதே டுகெனக்
கோங்(கு)ஆ கியவன் குருமா மணியே.

குறிப்புரை: ஆங்காரமதாய்=ஆணவத்துடன். திரு= திருமகளைத் தனது மார்பில் கொண்ட திருமால். அவரின் பலம்=தத்தம் ஆற்றலுயர்வு. பூ=மென்மை. பொன்=அழகு கோங்கு. ஆகிய=நடுநின்ற (கோங்கம்=நடுவு)

பொழிப்புரை: ஆணவத்துடன் நான்முகனும் திருமாலும் அவரவரின் ஆற்றலுயர்வை-பலத்தைப் பக்குவமாய் அறிந்து கொள்ள; மலர்ஒத்த திருவடியைத் திருமாலும், அழகிய திருமுடியை நான்முகனும் தேடிக் காண்போம் என்று முயல, இருவர்க்கும் புலனாகாது செழுஞ்சுடராய் நடுநின்ற சிவபெருமானுக்குக் குருவாகிய மாமணியே அருள்க.

விளக்கம்: "திருமாலொடு நான்முகனும் தேடியும் தேடொணாத் தேவன்" என்பது திருவங்கமாலை. தேடியும் காண இயலாமைக்குக் காரணம் அவர்களது ஆணவமே என்பதை "ஆங்காரமதாய்" என்று குறித்தார். இவர்களால் நெருங்க முடியாமை பற்றியே பெருமான் அண்ணாமலை = நெருங்க முடியாத நெருப்புமலை என்று குறிக்கப் பெற்றார். (அண்ணா=நெருங்க முடியாது).

இலக்கணக்குறிப்பு: திரு-தானியாகு பெயராய்த் திருமால் குறித்தது. அயனும் திருவும்-பூங்காலடி பொன்முடி என்பன எதிர் நிரல்நிறை அணி.

35. இமையா சலமீ துஎழுந் துலகம்
தமையே அருள்தா யவளா கியநல்
உமையாள் உருவா கியஉத் தமனே
கமையே எனைஆள் கதிர்மா மணியே.

குறிப்புரை: இமம்=பனி. இமையா சலம்=பனிமூடிய இமயமலை. எழுந்து=தோன்றி. தாய்=பார்வதிதேவி. உரு=அருளுரு. கமை=பொறுமையின் வடிவு.

பொழிப்புரை: பனிமூடிய இமயமலையில் தோன்றி, உலகனைத்தையும் ஈன்றதாயாகிய அருள்வடிவான உமையவளின் அருள்வடிவான உத்தமனே, பொறுமையின் வடிவே ஒளியுடைய பருமணியே என்னை ஆள்க.

விளக்கம்: இமயமலை அரசன் இமவான்-பர்வதராசன். பர்வதராசனுக்கு மகள் பார்வதிதேவி. "பேசரிய உயிரை எல்லாம் பெற்று, நோக்கிப் பெரும்போகம் அவை அளித்துப் பிறப்பினையும் ஒழித்திட்டு"-சித்தி.பர.3 என்பது அம்மை உலகை எல்லாம்அருள் தாயாக உள்ளமை வலியுறுத்தும். மேலும் "அருளது சத்தியாகும் அரன்தனக்கு" சித்தியார் 239:1 என்பதாலும். "ஆதலின் நமது சத்தி அறுமுகன்" - கந்தபுராணம் 14:19 என்பதாலும் அருள்வடிவான அம்மையே முருகன் என்பது போதரும்.

36. கனமா கியகார்த் திகைமா ரறுவர்
தனம்ஊ றியபால் தனைஉண் டுபசும்
புனல்மேல் வளர்புண் ணியஉன் அடியார்
மனம்மே வியவாழ் மயில்வா கனனே.

குறிப்புரை: கனம்=பெருமை. பசும்புனல்=தண்ணிய சரவணப் பொய்கை. மேவிய=பொருந்த.

பொழிப்புரை: பெருமை வடிவினராகிய கார்த்திகைப் பெண்டிர் அறுவரின் திருமார்பில் ஊறிய பால்பருகித் தண்ணிய சரவணப் பொய்கையில் வளர்ந்த புண்ணிய வடிவனே மயில்

ஊர்தியுடன் உனது அடியவர்களின் மனத்தில் பொருந்த வாழ்கின்றவனே அருள்க.

விளக்கம்: "அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ" (முருகு: 255) ஆறு=ஆறுதிருமுகம். "சரவணப் பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர் திருமுலைப்பால் உண்டான்"-சிலம்பு: குன்றக்குரவை என்பன காண்க.

இலக்கணக்குறிப்பு: மேவிய-செய்யிய என்னும் வாய்பாட்டுவினை எச்சம்.

37. நந்தாய் உமைநா டியேஞா னமுதம்
தந்தாள் அவள்சற் குணசீ லனேசம்
பந்தா வெகுபண் ணொடுபா மொழியும்
கொந்தார் மலர்சூ டிய கொற்றவனே.

குறிப்புரை: உமை=உமையம்மை. சம்பந்தா= திருஞான சம்பந்தனே. கொந்துஆர்=கொத்தாகப் பொருந்திய.

பொழிப்புரை: நம் தாயாராகிய உமையம்மை விரும்பி ஞானப்பால் ஊட்ட உண்ட சற்குணங்கள் வடிவான சீலனே; அளவற்ற பண்களுடன் கூடிய திருமுறை பாடியருளிய திருஞான சம்பந்தனே. கொத்தாகப் பொருந்திய மலர்சூடிய கொற்றவனே அருள்க.

விளக்கம்: திருஞான சம்பந்தர்: முருகப்பெருமானின் அவதாரமல்லர் என்பது இதன் பா.13ல் கூறப்பெற்றது. திருஞானசம்பந்தர் தமது முதல் மூன்று திருமுறைகளில் -382 பதிகங்களிலும் 22 வகைப்பண் அருளியுள்ளார் என்பர்.

இலக்கணக்குறிப்பு: கொத்து-கொந்து ஆனது எதுகை நோக்கிய செய்யுள் விகாரம்.

38. மதுரைப் பதிமே வியமன் னவனின்
சதுரைத் தவிர்சற் குணசண் முகனே
கதிரைப் புடைகற் பகம்ஓங் கிவளர்
கதிரைக் கிரிமே வியகண் மணியே.

குறிப்புரை: மதுரைப்பதிமேவிய மன்னவன்= கூன் பாண்டியன்; சதுர்=புத்தி=அறிவு. கதிர்=ஞாயிறு. கற்பகம்= தென்னை மரம். கதிரைக்கிரி=கதிர்காமம்.

பொழிப்புரை: மதுரைக் கூன்பாண்டியனின் சமணம் சார்ந்த அறிவை மாற்றிய சற்குணவடிவான ஞானசம்பந்தராகிய ஆறுமுகனே; ஞாயிற்றைமோதும் தென்னை மரங்கள் ஓங்கி வளர்ந்த கதிர்காமமலையிலும் எழுந்தருளியுள்ள கண்மணியே அருள்க.

விளக்கம்: கூன்பாண்டியன். "திருநீறு பூசப்பெற்று முன்னை வல்வினையும் நீங்கி முதல்வனை அறியும் தன்மை துன்னினான். வினைகள் ஒத்துத்துலை என நிற்றலாலே" -- திருத்தொண்டர்- 2722 என்பார் சேக்கிழார் பெருமான். தென்னை மரத்தைப் பூலோகக் கற்பகம் என்பது வழக்கு. திருஞானசம்பந்தர் முருகப் பெருமானல்லர் - பா.13 விளக்கம் காண்க.

இலக்கணக்குறிப்பு: "கதிரை" என்பது "கதிர்காமம்" என்பதன் மரூஉ

39. கந்திக் குலைஊ றியகள் பெருகிச்
சிந்தித் தெருமே வியசெந் துகளைப்
பந்திப் பொடுசென் றுபடிந் துவரும்
செந்திற் பதிமே வியசே வகனே.

குறிப்புரை: கந்தி=பாக்கு. குலை=பூக்குலை. கள்=தேன், செந்துகள் = புழுதி. பந்திப்பொடு=பிணித்ததுடன். சேவகன்=வீரன்.

பொழிப்புரை: பாக்கு மரத்தின் பூங்கொத்துகளில் சுரந்து பெருகிய தேன் சிந்தி, தெருவில் பொருந்திய நுண்ணிய புழுதியைப் பிணித்ததுடன் படிந்த திருச்செந்தூரிலும் எழுந்தருளியுள்ள வீரனே அருள்க.

40. தெங்குக் குலைமீ றியதேன் வழியப்
பங்கப் படுமா பழனம் தனில்ஏர்
சங்குக் குழுஊ ரியேசா டிவரும்
துங்கப் பழனித் துறைவே லவனே.

குறிப்புரை: தெங்கு = தென்னை. பங்கப்படு=குழைசேறு ஆன; பழனம்=நன்செய்வயல். ஏர் சங்குக்குழு=ஏர்களாகிய சங்குக் கூட்டம். ஊரி=ஊர்ந்து. சாடிவரும்=உழுபடைச் சாலாகவிளங்கும். துங்கம்=பெருமை.

பொழிப்புரை: தென்னம்பூக்குலையில் பொங்கிய தேன் வழிதலால், குழைசேறாக விளங்கும் நன்செய்வயலில் ஏர்களாகிய சங்குக் கூட்டம் ஊரியதால் அவை உழுபடைச் சாலாக விளங்கும் பெருமை பொருந்திய பழனியாகிய துறையிலும் எழுந்தருளியுள்ள வேலவனே அருள்க.

விளக்கம்: உழவில்; புழுதி உழவு, சேற்று உழவு என்ற இருவகையுண்டு. இங்குச் சுட்டப்பெற்றது சேற்றுழவு.

இலக்கணக்குறிப்பு: ஏர் சங்குக்குழு = உருவகம்.

41. வீசும் கொடிமல் லிகைமேன் மலரின்
நேசம் பெறவண் டுகள்நின் றுமுனி
கூசும் படிஊ தியகோட் டியொரு
தேசும் பெறுதென் கிரிவா சகனே.

குறிப்புரை: வீசும்=காற்றில் அசையும். நேசம்=அன்பு. முனி=யானைக்கன்று. கூசும்படி=அஞ்சுமாறு. ஊதிய=ஒலித்த கோட்டி=அழகு. ஒரு தேசு=ஒப்பற்ற புகழ்.

பொழிப்புரை: காற்றில் அசையும் மல்லிகைக் கொடியின் மேலான மலர்களின் அன்பினைப்பெற, வண்டுகள் மொய்த்து ஒலித்த ஒலியைக் கேட்டு யானைக்கன்றுகள் அஞ்சும்படியான அழகுடன் கூடிய ஒப்பற்ற புகழ் வாய்ந்த பொதிகை மலையிலும் எழுந்தருளியுள்ளவனே அருள்க.

இலக்கணக்குறிப்பு: மல்லிகை மலரில் தேனுக்காக வண்டுகள் மொய்த்ததை மலரின் அன்புபெற மொய்த்ததாகக் கூறுவது தற்குறிப்பேற்றம்.

42. காலித் திரள்செல் கிறகால் வழியே
ஆலித் துடர்ஆ றெனவே பெருகிச்
சாலிக் கதிர்மே வியதடி அமரும்
பீலிக் கிரிமே வியபெற் றியனே.

குறிப்புரை: காலித்திரள் = பசுக்கூட்டம். கால் = கால்பட்ட தடம். துடர்ஆலி = தொடர்ந்த மழைநீர். தடி = தண்டு. பீலிக்கிரி = மயில்மலை.

பொழிப்புரை: பசுக்கூட்டம் சென்ற தடத்தின் வழியே தொடர்ந்த மழைநீர் பெருகி ஓடி நெற்கதிருடன் கூடிய தண்டுகளில் பொருந்தும் மயில்மலையில் எழுந்தருளியுள்ள பெருமையனே அருள்க.

இலக்கணக்குறிப்பு: காலி-காரணக்குறி ஆக்கம்.

43. கருமே கமதாக் கியகால் வழியின்
வருமா புனல்யா வையும்வைத் துளதோர்
பெருவா ரிதிசீ றியபே ரலைஏர்
திருமா மதில்சூழ் வுறுசெந் திலனே.

குறிப்புரை: கால்=வாய்க்கால். மாபுனல்=வெள்ளம். வாரிதி=கடல். சீறிய பேரலை = சினந்து எழுந்த பெரிய அலை. ஏர்=அழகு.

பொழிப்புரை: கார்மேகம் தனது மழைநீரால் உண்டாக்கிய வாய்க்கால் வழியே ஓடிவரும் வெள்ளம் முழுவதையும் தன்பால் பெற்ற பெரிய கடலின் சினந்து எழுந்த பெரிய அலை சூழும் தெய்வத்தன்மை பொருந்திய மதில் கொண்ட திருச்செந்தூரிலும் எழுந்தருளியுள்ளவனே அருள்க.

விளக்கம்: சங்ககாலம் முதலே "அலைவாய்" என்று பெயர் பெற்ற திருச்செந்தூர், அலைவாய்க்கண் இருந்தும் கடலால்

விழுங்கப் பெறாத பெற்றியது ஆதலின் இதன் மதில் "திருமா மதில்" என்று சிறப்பிக்கப் பெற்றது. மேகமதாக்கிய கால் என்றதால் இது இயற்கையின் அமைந்த கால்வாயே தவிரச் செயற்கையான தன்று என்க.

44. பொன்ஆல் இலைகாய் உதிர்பூ வுடனே
மின்ஆர் பதிமே வியமென் தருசூழ்
நன்னோர் பொழில்நா டியமா நகர்வாழ்
மன்னே மிகுசீர் அலைவாழ் பவனே.

குறிப்புரை: பொன்=அழகு. மின்=மின்னல். மென்தரு= இளமரங்கள். நேர்=நெருங்கிய. சீர்அலை=தீருச்சீரலைவாய்.

பொழிப்புரை: அழகிய ஆலமரத்தின் இலை, காய், உதிர்ந்த பூ ஆகியவற்றுடன், மின்னல் மிக மின்னும், இளமரங்கள் சூழ்ந்த நன்மைகள் நெருங்கிய பொழில்களையுடைய மக்கள் விரும்பும் சிறப்புகள் நிறைந்த செந்தில் நகர் அலைவாய்க்கண்ணும் எழுந்தருளியுள்ள மன்னவனே அருள்க.

45. சோலைக் கிளிஆ தியசூழ் பரவைக்
கோலத் தொடுகூ வியகோ கிலநற்
காலைப் பொழுதுன் இருகா ததனில்
சீலத் தொனிதோய் உறுசெந் திலனே.

குறிப்புரை: பரவைக்கோலம்=கடல் சார் அழகு. கோகிலம்=குயில். சீலத்தொனி=இன்குரல்.

பொழிப்புரை: புலர்காலைப்பொழுதில் கடல் சார்ந்த அழகுடன் சோலையில்உள்ள கிளிகள் முதலிய பறவைகளும் குயில்களும் கூவிய இன்குரல் உனது இரு காதுகளில் பொருந்தத் திருச்செந்தூரிலும் எழுந்தருளியுள்ளவனே அருள்க.

விளக்கம்: நாள் முழுதும் ஒலிக்கும் கடல்அலை ஒலியுடன் புலர்காலையில் கிளி குயில் முதலியவற்றின் இனியகுரல் திருப்பள்ளி எழுச்சியாயிற்று என்க.

46. பாரப் புயல்வந் துபடிந் தமரக்
கோரக் குறமா தர்கொண் டதனின்
நீரைப் பிழிஎன் றுநெருங் கியம
யூரக் கிரிமே வியஉத் தமனே.

குறிப்புரை: பாரப்புயல்=நீர்த்துளிகளால் கனத்த மேகம். கோரக் குறமாதர்=விரைந்துவந்த குறத்தியர். கொண்டு=கைக்கொண்டு. நெருங்கிய=கூடிய.

பொழிப்புரை: நீர்த்துளிகள் செறிந்ததால் கனத்தமேகம் வந்து படிந்து குன்றில் சற்றே அமர்தல் கண்ட குறத்தியர், விரைந்து வந்து அம்மேகத்திரளைக் கைப்பற்றி அதிலுள்ள நீரைப்பிழிந்து எடுக்கக் கூடுகின்ற மயில்மலையில் எழுந்தருளியுள்ளவனே அருள்க.

விளக்கம்: எந்நாளும் மேகம் கூடிக் கனத்த மழைபொழிவதால், தேனாற்றிலும் ஊருணிகளிலும் உள்ள கலங்கல் நீர் பருகுதற்கு ஆகாது. எனவே குறத்தியர் பாரப்புயல் கண்டதும் விரைந்து வந்து நீரைப்பிழிந்து கொண்டனர் என்க. விரைந்ததன் நோக்கம் அப்பாரப் புயல் மழையாகச் சொரியு முன்னும் அவ்விடத்தைவிட்டு வெளியேறுமுன்னும் நீர்பெறவேண்டும் என்பது ஆகும்.

47. பொன்ஆ டவர்பிள் ளைகள்வந் துபொழில்
தன்பால் மறைதா பரம்மீ தில்அமர்ந்(து)
என்நா ளும்இருந்(து) இசைஆ டல்புரி
நன்னா கமதே றியநா யகனே.

குறிப்புரை: பொன்=செல்வம். ஆடவர்=மக்கள். தாபரம்=மரம். என்நாளும்=நாள்முழுதும். நன்நாகம்=நன்மையமைந்த மயூரகிரி.

பொழிப்புரை: செல்வம் மிக்க மக்களின் பிள்ளைகள் உயர்மரச் சோலைகளால் மறைக்கப்பட்ட மலையில் மரக்கிளையில் ஏறி அமர்ந்து பாடியும் ஆடியும் மகிழும் நன்மையமைந்த மயூரகிரியின் உச்சியில் எழுந்தருளியுள்ள தலைவனே அருள்க.

விளக்கம்: "ஆடவர்" என்பது ஆண்மக்கள் என்ற பொருள்தருவதே பெரும்பான்மையாயினும் "பிள்ளைகள் என்ற பின் சொல்நோக்கிப் பெற்றோர் என்று கொள்ளவேண்டுவதால் மக்கள் என்று பொருள்

கொள்ளப்பெற்றது" எவ்வழி நல்லவர் ஆடவர் என்ற புறம் 187:3 என்றவிடத்தும் ஆடவர்=மக்கள் என்று பொருள் கொள்வதே சால நேரிது. மரக்கிளைகளில் ஏறி அமர்ந்து ஆடுதல் பாடுதல் என்பன இருபாலுக்கும் ஒத்தன ஆதலின் "பிள்ளைகள்" என்றார்.

இலக்கணக்குறிப்பு: இசை ஆடல்-எண்ணும்மைத் தொகைகள். எந்நாளும் எனற்பாலது என்நாளும் என்று வந்தது செய்யுள் விகாரம்.

48. வித்தியா தரர்தங் கள்கை வீணையொடு
நித்தியா சுகமா கியநின் புகழைப்
பத்தியாய் அவர்பாடி மருங் கடையும்
சித்தியாய் வளர்தென் கிரிவா சகனே.

குறிப்புரை: வித்தியாதர்=தேவருள் ஓரினத்தவராகிய கந்தருவர். நித்தியா சுகம்=நாடோறும் பெறும் சுகமாக. மருங்கு=பக்கம். சித்தி=மோட்சஉலகு.

பொழிப்புரை: கந்தருவர் தமது கையில் ஏந்திய வீணையுடன் வந்து நாடோறும் அவர்கள் பெறும் சுகமாக உனது புகழைப் பத்தியுடன் பாடி நெருங்கும் மோட்ச உலகு போல் உள்ள பொதிகை மலையிலும் எழுந்தருளியுள்ளவனே அருள்க.

49. புவியிற் பலமா யைபுகன் றிடுவோர்
கெவியிற் படியா துகிளர்ச் சியுறக்
குவியப் பலவா றுகுணத் தையிரு
செவியிற் புகஉய்த் திடுசேவகனே.

குறிப்புரை: மாயை=பொய். கெவி=குழி. படியாது=மூழ்காது. கிளர்ச்சியுற=மேலோங்க. குவிய=மெய்ம்மையில் மனம் குவிய. பலவாறு=பற்பல வகைகளிலும் செவியிற்புக உய்த்திடு=கேட்டு நடக்குமாறு கூறியருள்க. குணம்=சத்துப்பொருள்.

பொழிப்புரை: இவ்வுலகில் பற்பலவாறு பொய்கூறுவோரின் படுகுழியில் மூழ்காது மேலோங்கவும், என்மனம் மெய்ம்மையில் குவியவும், பலவகைகளில் சத்துப்பொருளை எனது இரு செவிகளிலும் நான் கேட்டுஅதன்படி நடப்பதற்கு வீரனே நீ கூறியருள்க.

விளக்கம்: அருணகிரியாரும் இவ்வகை உபதேசத்தை வேண்டினார் என்பதை-"சவலை அறிவினர் நெறியினை விடஇனி அடியேனுக்கு இசைய இதுபொருள் என அறிவுற ஒரு வசனம் உற இருவினையற மலமற இரவு பகல்அற எனதற நினதற-அநுபூதி இனிமை தரும் ஒரு தனிமையை மறைகளின் இறுதி அறுதியிட அரிய பெறுதியை இருமையில் ஒருமையில் பெறுமையை வெளிபட மொழிவாயே"-("தசையும் முதிர".... 1-2) என்பது விளக்கும்.

50. மின்னுக்(கு) இணைஒத் திடுமே னியர்பால்
உன்னிக் கலவிக் குளுளைந் துதினம்
பன்னிச் செலுபான் மைதுடைத்(து) அடியேன்
முன்நிற் கஎழுந் தருள்முன் னவனே.

குறிப்புரை: மின்னுக்கு இணை ஒத்திடும் மேனியர்= மின்னல்போன்று விளங்கும் உடம்புடைய விலைமாதர். உன்னி=நினைத்து. உளைந்து=மனக் கவலைப்பட்டு. பன்னிச் செலும் பான்மை=நெருங்கிச் செல்லும் இயல்பு.

பொழிப்புரை: மின்னல்போன்று விளங்கும் உடம்புடைய விலைமாதர்பால் பெறும் இன்பதை நினைந்து, தரவேண்டிய விலைபற்றிக் கவலைப்பட்டு, நாடோறும் அவர்களை நெருங்கிச் செல்லும் இயல்பை முற்றாக ஒழித்து அடியேனுக்கு அருள்புரிய முன்னவனே என்முன் எழுந்தருள்க.

விளக்கம்: மின்னல் அணைவாரின் அழியும் நிலையே விலைமாதர் அணைவார் நிலையும் என்பதை உவமையால் குறிப்பிட்டார்.

இலக்கணக்குறிப்பு: மின்னுக்கு ..... மேனியர்-உவமையணி.

51. சேலுக்(கு) இணைசெப் பிடுகூர் விழியார்
மாலில் தினம்உற்று மயங் கல்உறா
வேலைக் கரம்அத் தில்எடுத் துமயில்
காலைக் கொளவந் தருள்காட் டுவையே.

குறிப்புரை: சேல்=கெண்டைமீன். மால்=காம மயக்கம். கர மத்தில்= திருக்கரத்தில். காலைக் கொள=திருவடிகளைப் பற்றிக்கொள்ள.

பொழிப்புரை: கெண்டை மீன்ஒத்ததும் காமநோக்கில் கூரியதும் ஆகிய கண்களையுடைய விலைமாதர் மயக்கத்தில்

தினம் வீழ்ந்து மயங்காமல், உன்திருக்கரத்தில் வேல்ஏந்தி, மயிலேறி உன் திருவடிகள் இரண்டினையும் நான் பற்றிக்கொள்ள என்முன்வந்து அருள்க.

விளக்கம்: பிறழ்ச்சி, ஒளிவிடுதல், வடிவுஆகியவற்றால் கெண்டை மீன் கண்களுக்கு உவமை. தான் கண்டவரைத் தனக்குப் பணியவைத்தலின் கூர்மை, விழிக்கு அடையாயிற்று.

இலக்கணக்குறிப்பு: சேலுக்கு....கூர்விழி-உவமையணி. கரமத்தில்- கரம், அத்துச் சாரியை பெற்றது.

திருச்சிற்றம்பலம்

**பாட்டின் உனைப்புகழ்ந் தேமண்
பாட்டை ஒழித்துள்ள அன்பர்
நாட்டில் இருக்கினும் காட்டை
நண்ணி இருக்கினும் அன்றே
கேட்ட தெல்லாம்அளித்(து) என்றும்
கேடில் அரும்பொருள் தன்னைக்
கூட்டிக் கொடுத்திடும் கோவே
குன்றக்குடியுறை தேவே.**

-- குன்றக்குடிப் பதிகம்
அருள்திரு பாம்பன் சுவாமிகள்

அகர நிரல்: சந்தவருகைப் பதிகம்

	பா எண்
ஒரு முதல்	2
கவுணியர் குலம்	3
கொடுவிட மதை	10
சங்கொலிமிகு	7
சரவண மதில்	5
திருமருவிடும்	1
பரிபுரம் அதின்	8
புகை ஒழிவுறு	6
மடலுறுமது	4
வளமுடன் அறுபடை	9

குன்றக்குடி முருகர் அநுபூதி

அஞ்சொன்று	23
அண்டத்துறும்	29
அத்தா பழனி	9
அய்ந்தாறுடன்	7
ஆங்காரமதாய்	34
ஆறாகிய சாத்திரம்	26
ஆனாய் உலகுக்கு	16
இமையாசலம்	35
எட்டெட்டுடன்	27
ஒன்றாய்ப்பலவாய்	19
கங்காளன் அருள்	10
கந்திக்குலை	39
கருமேகமதாகிய	43

கல்லாலடியில்	32
கனமாகிய கார்த்திகை	36
காடாய் மலையாய்	17
காராய் கருவாய்	20
காலித்திரள்	42
கொல்லா விரதம்	14
சிங்கத்தமர்	13
சிந்தாகுலம்	5
செந்தூர்வளர்	காப்பு
சேலுக்கிணை	51
சோலைக்கிளி	45
திருவே அருவே	1
தில்லைப்பதியில்	33
தெங்குக் குலை	40
தேடும் பொருள்	11
நந்தாய் உமை	37
நய நாயகர்	28
நாதாதிரை	15
பஞ்சந்திரி	24
பட்டேன்வெகு	8
பாரப்புயல்	46
பிரமன்தனை	6
புவியிற் பல	49
பொங்கார் அரவு	30
பொன்ஆடவர்	47
பொன்ஆலிலை	44
மதியேரவியே	2
மதுரைப்பதி	38

மண்ணே மரமே	4
மறியும் மழுவும்	31
மறைநாலும்	25
மறையே தனியே	3
மாலாய் அயனாய்	18
மின்னுக்கிணை	50
முத்தாய் மணியாய்	21
முன்னே மறையின்	12
வண்டே நுகரும்	22
வித்தியாதரர்	48
வீசும் கொடி மல்லிகை	41

அச்சிட்டோர்:

விடெக் கம்ப்யூட்டர்ஸ்

உத்தமர் கோவில், திருச்சி-621 216.

போன்: 0431-2591490, 94871 92473